தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை 13—8—55 | சனிக்கிழமை | இதழ் 9

கஞ்சாச் செடியும் குன்றக்குடியும்!

"அவனை மெய்ஞானி என்றார்கள் மக்கள். ஆனால் அவன் பெண்களை சந்தைப்பொருளாகக் கருதி அவர்களை மேய்த்துத் திரிந்தான். அந்தப் போலி வேடதாரிக்கு ஆறு மாதக் கடுங்காவல்!"

"முற்றும் துறந்த முனிவனாக நடித்துக்கொண்டே, சொத்தும், சுகமும் சேகரித்துவிட்டான். பல வழக்குகளின்பேரில் அவன் கைது செய்யப்பட்டான்.

"கள்ள நாணயக்குகை கண்டு பிடிக்கப்பட்டது. காவியுடைச் சாமியார் மூவர் கைது செய்யப்பட்டனர்"

இதுபோன்ற செய்திகள் எப்படியேனும் வாரம் ஒருமுறை செய்தித்தாள்களில் வந்துகொண்டிருந்தாலும், வேலையற்றோரும், வேதாந்தப் போர்வையிலே வாழ்வோரும், 'மதம் ஒழுக்கத்தை வளர்க்கும்; மகேஸ்வரனின் அருளைப் பெற உதவும்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். காலத்தின் ஓட்டத்தால் ஞாலத்தின் போக்கை உணராதவர்களல்ல அவர்கள். உணர்ந்ததை உரைத்துவிட்டால், உண்டு, களித்து, உறங்கும் உலகின்பத்தை அவர்கள் பெறமுடியாது என்பதால்தான் இதயம் கூறும் மெய்க்கூற்றைக்கூட அவர்கள் கொன்றுவிடத் துணிந்துவிடுகிறார்கள்.

அணிமையில் ஒரு வழக்கு - நம் தேசம் தாண்டி பிறதேசத்தில் - நேருவின் கண்கள் விரைவிலே படக்கூடிய தேசத்தில் நடைபெற்றிருக்கிறது.

கோலாப்பூர் என்னும் ஊரில் பொதுவிடங்களில் ஆடைகள் எதுவும் இல்லாமல் பிறந்த கோலத்தில் நிர்வாணமாகச் சென்றுகொண்டிருந்த ஒரு சாது, நீதிபதியின்முன் நிறுத்தப்பட்டார். ஆனால், வழக்கின் முடிவு சாதுவுக்குச் சாதகமாக முடிந்திருக்கிறது. மதக் கோட்பாட்டின்படி நடந்துகொள்ளச் சட்டமிருக்கிறதாக காரணம் காட்டப்பட்டு அந்த நிர்வாண மனிதர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

ஆடை துணிமணிகள் கண்டுபிடிக்கப்படாத காலத்தை காட்டுமிராண்டிக் காலம் என்றும், துணி நெய்தல் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு, மனிதன் ஆடை உடுத்திய காலத்தை அறிவு வளர்ச்சிக் காலம் என்றும் சொல்லுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஆனால், மதத்திற்கும், நிர்வாணத்திற்கும்- ஆராய்ச்சியாளர் கருத்துப்படி காட்டுமிராண்டித்தனத்திற்கும் தொடர்புண்டு என்கிறது சட்டம். காட்டுமிராண்டித் (நிர்வாணக் கோலம்) தனம்தான் கடவுள் நிலை என்றால், மதப்பற்றுக்கு அடையாளம் என்றால், இன்றைய நாகரீக வளர்ச்சி, அறிவின் கதிர்கள், கடவுளின் எண்ணத்திற்கு மாறுபட்டவையா? உலகத்தின் நல்வாழ்வு, ஆண்டவன் விருப்பத்திற்கு எதிரானவைதானா? நிர்வாணக் கோலத்தை விரும்பும் மதம்தான் ஒழுக்கத்தையும், அறிவையும் வளர்க்கும் குணம்பெற்றவை என்றால் நம்பமுடியுமா? மதத்தை தீயவழியிலே பின்பற்றுவோருக்கும் சட்டம் துணைநின்றால், பக்தன் ராமதாசைப் பின்பற்றுவோனுக்கும் சட்டம் துணைநிற்காது என்று எப்படிக் கூறமுடியும்?

இத்தகைய சட்டங்களை தனக்கு சாமரம் வீசுவதற்கென்றே வைத்துக்கொண்டுதான், 'மனிதன் கதை'யின் பால்யகாலப் பிரியர் குன்றக்குடி 'அடிகளார்' சென்றவாரம் திருப்புத்தூர் கூட்டத்தில் 'மதவாதிகள் அரசியலில் புகக்கூடாது என்று சொல்லும்போது. அரசியல்வாதிகள் ஏன் மதத்துறையில் புக வேண்டும்' என்று கேட்டிருக்கிறார். நிர்வாணமாகத் திரியலாம் என்று விட்டுவைக்கிற அளவுக்கு அரசியல் சட்டங்களே உதவிபுரிகின்ற போதும். அரசியல் வாதிகள் மதத்துறையில் தலையிடக்கூடாது என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம் அதற்கு? 'நாங்கள் எதுவும் செய்வோம்; எங்களைக் கேட்க யாரும் முன்வரக் கூடாது என்பதுதானே!

பேசத் தெரிந்த குழந்தை பாலபாடம் படிக்கத்தெரிந்த குழந்தை இடுப்பிலே துணியில்லாதுபோனால் பெற்றதாய், பேணிவளர்த்த தந்தை குழந்தையைக் கண்டித்து ஆடையூட்டி, அவிழ்ந்தாடும் சிகையினிற்கு எண்ணெய் நீவி அனுப்புகின்ற தமிழ்நாட்டில். அதே மரபில் பிறந்து 'வேறு', நிமித்தம் வேதாந்தியானவர்கள்தான் சொல்லுகிறார்கள் மதவாதிகள் பாதையில்குறுக்கிடக்கூடாதென்று. வேறு எந்த நாட்டு அரசியல் சட்டத்திலேயும், 'பிறவிக் கோல'த் திற்கு அனுமதியளிப்பதாகத் தெரியவில்லை. அரசியலில் அருளியல் கலந்தால் பண்பாடும், நேர்மையும் வளரும் என்கிறார்கள். மதத் துறையில் அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது என்கிறபோது, மக்களின் சுபிட்சத்திற்காக மதுவும், கஞ்சாவும் கூடாதென்றுதடைவிதிக்கும் அரசாங்கம், மதவாதிகள் மட்டும் கஞ்சாச் செடியை வீட்டில் வளர்த்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று துறவிகள் எதிர்பார்க்கிறார்களா?

மதத் துறையில் அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது என்கின்றபோது. 'தேவியவள் பால் சுரக்கத் திருஞான சம்பந்தன் கவிஞனான்' என்ற மத குருக்களின் தத்துவத்தைச் சர்க்கார் நம்பி, பள்ளிக்கூடங்களை மூடிவிடவேண்டுமா?

ஒழுக்கம் வளர்க்கிறார்களாம்! வளர்த்துக்கொள்ளட்டும் — ஆனால் வளர்க்கின்ற ஒழுக்கம், அறிவிய

8-ம் பக்கம்

"உலகியற்றியான்" யார்? ஆண்டவனா, அரசனா?

கண்ணதாசன்

30-7-55 தேதிய இதழ்ல், எடுத்துத் தந்திருந்த ஐம்பது குறள்களிலும் "உலகு" அல்லது "உலகம்" வருவதைக் கண்டீர்கள். அதிலே, எத்தனை குறள்களில் உலகு, நாடு என்ற பொருளோடு இயங்குகிறது! பார்ப்போம்.

1, 11, 13, 19, 20, 23, 27, 58, 140, 211, 215, 233, 234, 243, 247, 256, 280, 290, 294, 336, 346, 374, 387 - ஆக இருபத்து மூன்று குறட்பாக்களிலும், சந்தேகத்துக்கிடமில்லாமல் உலகும் உலகமும், கடல்சூழ்ந்த பெருவையத்தையேகுறிக்கின்றன. இதை, வீம்புக்கு ஆராய்வோர்கூட மறுக்கமுடியாது.

அடுத்து, ஒரு குறள், 'உலகு', நாடாகக் கையாளப்பட்டுள்ளதோ என்ற சந்தேகத்தைக் கிளறும், நாடென்று கூற ஆசைப்படுவோர்க்கு! அது இது:

செவிகைப்பச் சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு

இது, வரிசைப்படி, 389 வது குறள். இதன் பொருள், "குறை கூறுவோரின் சொற்களை, செவி கைக்கும் நிலையிலும் பொறுக்கின்ற பண்புடைய அரசனது குடை நிழலில் உலகம் தங்கும்." எல்லோருமே இப்படித்தான் கூறியுள்ளார்கள். சிவஞானத்துக்குக்கூட இதில் சந்தேகம் வரமுடியாது. ஆனாலும், சந்தேகம் ஏற்படுவதாக வைத்துப் பதில் கூறுவோம். என்ன சந்தேகம், எப்படி ஏற்படும்? "அரசனது குடை நிழலில் தங்கும்" என வருவதாலே, "உலகம் என்பது நாடுதான்" எனச் சிறிது சந்தேகம்...அப்படி வந்தால், என்ன அதற்குப் பதில்?"

அரசனது குடை நிழலில் நாடு தங்குவது இயற்கை. **தங்கித்தான் தீரும், அவன் செவிகைக்கும்சொற்களைப் பொறுக்காதவனுனாற்கூட!** இங்கே, "பொறுத்தருளும் மன்னனுயிருந்தால் உலகமே அவன் குடையில் தங்கும்!" என்னும் பொருள்தான் நிற்கிறது. "பெரியவர்களை உலகமே பாராட்டும்", "தியாகிகளை உலகே மதிக்கும்" என "ஏ" காரமிட்டுவரும் பொருள் தான். அந்த "ஏ"காரத்தைத் தொக்கலாகக் கொண்டு, "உலகு தங்கும்" என வருகிறது. ஆகவே, செவிகைக்கும் சொற்களைப்பொறுத்தருளும் பண்புக்கு வள்ளுவன் கொடுக்கும் மதிப்பு, "உலகம் அவன் குடையில் தங்கும்" என்னும் பெருமைக் கருத்தாகப் பரிணமிக்கிறது. ஆக, இந்தக் குறளில் வரும் 'உலகம்' நாடாக இருக்கலாமோ என்ற ஐயம் சிறிது ஏற்பட்டால்கூட அது தவறுதான் என்பது விளங்கும். நிற்க.

அடுத்து, 389, 399, 425, 426, 470-என வரிசை எண்கள் கொண்ட குறள்களும், உலகும் உலகமும், "நாடு" என்ற மயக்கத்துக்குச் சிறிதுகூட இடம் வைக்காமல், உலகங்களாகவே காட்சியளிக்கக் காண்கிறோம். இவற்றிலேயும், தோழர் சிவஞானம் விரும்பி விரும்பி, புகுந்து புகுந்து, ஆராய்ந்தால்கூட அவர் கருத்துக்குத் துளி ஆதாரமும் கிடைக்காது.

பிறகு வரும் 520 வது குறளில் காணப்படும் 'உலகு', ஒரு சிறிது "நாட்டு மயக்கம் தரலாம்", அப்படி ஆசைப்படுவோர்க்கு! அது இது:

நாடோறும் நாடுக மன்னன்
வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு

இதன் பொருள்: "தொழில் செய்கின்றவன் கோணுதிருக்கும் வரையில் உலகம் கெடாது; ஆகையால் மன்னன் நாள்தோறும் அவனுடைய நிலைமையை ஆராயவேண்டும்." இதிலே உலகம், நாடாக இயங்குவதாக எப்படிச் சந்தேகம் வரும்? அந்தச் சந்தேகத்தையும் நாமே கிளப்புவோம்! உலகம் கெடாமலிருக்க, மன்னன் தொழில் செய்கின்றவனின் நிலைமையை ஆராயவேண்டும்" என்கிற கருத்து வருவதாலே, உலகம், நாடாகத்தான் இருக்கவேண்டும் என்பது தான் அது; ஏனென்றால், மன்னன், தொழில் புரிவோனைக் கவனிப்பதற்கும் "உல"குக்கும் என்ன சம்பந்தம்?--இதுதான்-சிவஞானத்துக்கு வராத - ஆனால் வரக்கூடிய சந்தேகம்! இந்த நேரத்தில் உரையாசிரியர்கள், 'உலகம்' எனறே கூறியிருப்பதையும் கூறிவிட்டு, பதிலைப் பார்ப்போம்.

ஒரு நாடு சீர்கெட்டுக் கிடக்கிறது என்றால், முழு உலகத்தின் சிறப்புக்கும் அது களங்கமாகும். அதாவது, அழகு வடியும் ஒரு மங்கைக்கு ஒரு கண் மட்டும் குருடானால்கூட, அவளது முழுவடிவத்தின் அழகும் குன்றிவிடுகிறதே, அதுபோல! ஒரு நாட்டு மன்னன், அந்த நாட்டுத் தொழிலாளியைக் கவனிக்காமல் விட்டால், அந்த நாடு கெடும்; அதனால், 'உலகு'க்குள்ள சீர்-சிறப்பு - அமைப்பு இலக்கணம் கெடும். அத்தனை விதிகளும் அமைப்பும் சிறப்பும் கச்சிதமாகப் பொருந்தியதுதான் உலகு எனத் தனிப்பட அமைக்கப்படும். ஒரு நாடு சீர்கெட்டாலும் உலகச் சிறப்புக் கெடும்-இதுதான், மன்னனுக்கும் உலகுக்கும், 'உலகம்' என்கிற பொருளிலே, தொடர்பு கொடுக்கப்படுகிறது, குறளிலே! அதோடு, இது, ஒவ்வொரு நாட்டு மன்னனுக்கும் விதியாகி விடுகிறது. இப்படி அத்தனை நாடுகளுக்கும்பொருந்துவதாலே, மன்னன் என்னும் ஒருமை 'மன்னர்கள்' என்னும் பன்மைக்கு ஈடுகொடுத்துக்கொண்டு 'உலகம்' என்கிற ஒருமையோடு முறையான வாக்கியமாகிவிடுகிறது. அதனால், இதில் வரும் உலகம், உலகந்தானே தவிர, நாடு அல்ல! நிற்க.

அடுத்து, 542 வது குறளான,

வானோக்கி வாழும் உலகெலாம்
மன்னவன்
கோல்நோக்கி வாழுங்குடி

என்பதற்குப் பொருள் - டாக்டர் மு. வரதராசனார் உட்பட உரையாசிரியர்கள் கூற்றுப்படி - இது தான்.

"உலகத்தில் உள்ள உயிர்கள் யாவும், மழையை நோக்கி வாழுகின்றன, அதுபோல், குடிகள் யாவரும் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழுகின்றனர்."

இதிலே, உலகு, நாடுதான் என்கிற சந்தேகம் யாருக்கும் வரமுடியாது. காரணம், தெளிந்த பொருள் குறளிலேயே இருப்பதுதான்! "குடிகள் மன்னனின் செங்கோலை நோக்கி வாழுகின்றன. எதுபோல் என்றால், உலகம் - உயிர்கள் - மழையை நோக்கி வாழ்வது போல!" என்பது 'கொசுரு பிசுரு' இல்லாத பொருள்! ஆகவே இதிலும், உலகு, உலகமே தவிர நாடு அல்ல!

தொடர்ந்துவரும் 544 வது குறளான,

குடிதழீஇக் கோலோச்சும்
மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு

என்பதைக் காண்போம். இதன் பொருள், "குடிகளை அன்போடு அணைத்துக்கொண்டு செங்கோல் செலுத்தும் அரசனுடைய அடியைப் பொருந்தி, உலகம் நிலைபெறும்." என்பதாகும். இதில் "நாட்டு மயக்கம்" ஏற்படுமானால், 389 வது குறளான "செவிகைப்பச் சொற்பொறுக்கும்"என்பதற்குச் சொல்லியுள்ள பதிலையே வைத்து இதைப் பார்க்கலாம். குடிதழீஇக் கோலோச்சும் மன்னனுக்குத் தரப்படும் மரியாதைதான், உலகே அவன் கீழ்த் தங்கி நிலைபெறும் என்னும் பொருளாக இதில் பரிணமிக்கிறது. இதிலும் உலகு, நாடல்ல-அல்லவே அல்ல!

மற்றும், 571, 572, 578, 598, 612, 670, 841, 850, 874, 970, 994, 996, 1015, 1025, 1031, 1032, 1103, 1198 - எண்கள் கொண்ட எல்லாக்குறள்களுள்ளும் வரும், "உலகு-உலகம்" எனும் சொற்கள் யாவும், துளிக்கூட மயக்கத்திற்கிடமின்றி, 'ஆழி சூழ் உலகை'த்தான் குறிக்கின்றன. இவற்றில் ஐயங்கொள்வாரும் இல்லை-கொண்டால் தேறுவாரும் இல்லை!

ஆக, குறளில், மொத்தம் ஐம்பது இடங்களில் வரும் உலகமும்-தெள்ளத்தெளிய பெருவையத்தையே குறிக்கின்றன, பிரச்சினைக்கு இடமாகிவிட்ட 1062 வது ("இரந்தும்") குறள் உட்பட! அப்படியே அதை 'நாடு' என்பார்க்கு இறுதியாக ஒரு சொல். நாற்பத்தொன்பது குறள்களில், 'உலகு' உலகமாக இருக்க, ஒரு உலகு, நாடாவது எப்படி? அந்த இடத்தில் மட்டும் திடீரென்று வள்ளுவன் அந்தக் கருத்தைச் சொல்லிவைத்தானோ! "ஒரு சொல் பல பொருள் - இட நோக்கி ஆய்தல்" என்னும் முறைப்படியும், குறளில், உலகு உலகுதான்! நாடல்ல - அல்லவே அல்ல! ஆகவே, தனது 1330 அருங்குறள்களிலும் வள்ளுவன், 'உலகு' என்ற சொல்லை, 'நாடு' என்ற பொருளில் வழங்கவே இல்லை எனத் துணியலாம்!

அடுத்து, 'இயற்றுதல்' எனும் சொல், குறளில் எத்தனை இடங்களில் வந்துள்ளது? மூன்றே இடங்கள்! அவை இவை:

(1) இயற்றலும் ஈட்டலும்
காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு
—384—

(2) ஒண்பொருள் காழ்ப்ப
இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு
—760—

(3) இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின்பரந்து
கெடுக உலகியற்றி யான்
—1062—

இதிலே, 384 வது குறளின் பொருள்: "பொருள் வரும் வழிகளை மென்மேலும் ஆக்கலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன்" என்பதாகும். இதிலே இயற்றல், ஆக்குதலாகத்தான் நிற்கிறது-ஒன்று.

மன்னன், பொருள் வரும் வழிகளை ஆக்குபவனே தவிர, நாட்டையோ-உலகத்தையோ ஆக்குபவன் அல்ல என்பதும் விளங்குகிறது - இரண்டு!

அடுத்து, 760 வது குறளில் வரும் "இயற்றியார்க்கு" எனும் சொல்லும், படைத்தவர்க்கு என்னும் பொருள் கொண்டு இயங்குதல், வெள்ளிடைமலை!

தொடரும், 'பிரச்சினைக்கு இடமான' 1062 வது குறளில் வரும் 'இயற்றியா'னும் படைத்தவனாகவே இருக்கிறது-உரைகளில்-உண்மையில்-ஒழுங்கான பொருளில்.

ஆக, 1330 குறள்களிலும் உலகு, நாடாகவும் இல்லை; இயற்றியான் நடத்துபவனாகவும் இல்லை. ஆகவே உலகை இயற்றியான், உலகைப் படைத்தவன் என்கிற - மூலமுதல்வன் என்கிற, உருவும் பெயரும் தெரியப்படாத, கடந்து நிற்கின்ற, ஒரு சக்தி எனப்படும் ஒன்றைக் குறிக்கிறதே தவிர, அரசனைக் குறிக்கவே இல்லை! வள்ளுவர் காலத்தில் ஆரிய மரபு கலந்துவிட்டமையும், குறட்பாக்களின் ஓரிரு பகுதிகளில் அது கலந்துள்ளது என்பதையும் - புதுப்பொருள் காணும் சீர்திருத்த வாதிகளும் மறுக்கவில்லை. இடம் நோக்கிப் புதுப்பொருள் காண்கிறார்கள்-வழு ஏற்படாமல்! அவ்வளவுதான்! இன்னும் சொல்லப்போனால், இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளைக் கூறும்போது, வள்ளுவன், சினந்தும், எள்ளி நகைத்துமே வந்திருப்பதை நாம் எடுத்துக்காட்டலாம்.

"பிச்சை எடுத்து ஒருவன் வாழ வேண்டுமானால், அந்தப் 'படைத்தவ'னும் பிச்சை எடுத்து அலையட்டுமே!" என்றும், "தேவர் அனையர் கயவர்" என்றும் கூறியிருத்தலை எடுத்துரைக்கலாம்! அது இந்தப்

(8ம் பக்கம் பார்க்க)

எங்கும் விற்பனையாகிறது
ஆர். கருணாநிதி எழுதிய
இன்ப இரவு
விலை 3 அணு
கமிஷன் 33 1-3 பெர்சன்ட்
பானு பிரதர்ஸார் தீட்டிய ஆர்ட் வர்ணமுகப்புடன் உணர்ச்சிகரமான கதை.
தபால் செலவு தனி.
விளக்கமான புத்தக பட்டியலுக்கு விற்பனையாளர்கள் இன்றே எழுதுக.
முல்லை பதிப்பகம்,
கிருஷ்ணராயபுரம் P.O.,
திருச்சி ஜில்லா.

எண்ணம்

கண்ணதாசன்

பிரதேச மொழிக்குக் குந்தகமில்லாமல், இந்தியை எப்படியெப்படிப் புகுத்துவது என்கின்ற ஆராய்ச்சியை விசாரணை மூலம் நடத்த, இந்திக் கமிஷன் என்பதாக ஒன்று டிசம்பரில் சென்னை வர இருக்கிறது. அதன்முன் சாட்சியம் கூற வருமாறு பல கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதோடு கேள்வித்தாளும் அனுப்பப் பட்டிருக்கிறது. அதில் காணப்படுவதெல்லாம் இந்தியை எப்படி எப்படி எந்தெந்த விதத்தில் புகுத்துவது என்கிற விசாரணையே தவிர, இந்தி வேண்டுமா, வேண்டாமா என்பதல்ல. சமீபத்தில் சில தேசியப் பத்திரிகைகளெல்லாம், கமிஷன், இந்தி வேண்டுமா, வேண்டாமா என்பதை அறிய வருகிறது என்ற கருத்துப்படவே எழுதியிருந்தன. இப்போது பட்டவர்த்தனமாக அது இல்லை என்பது தெரிந்துவிட்டது

இந்தி அறவே வேண்டாமென்று தீர்மானிக்கின்ற தமிழர்சமுதாயம் எப்படிப் புகுத்துவது என்ற ஆராய்ச்சிக்குப் பதில் சொல்லப்போவது அர்த்தமற்றது. திராவிட நாட்டைப் பொறுத்தவரையில், எந்த ரூபத்திலும் இந்தி தேவையில்லை என்பது வெள்ளிடை மலை. நாட்டிற்கு ஒரு பொது மொழி தேவைதான் என்றால், உலக உறவுக்குப் பயன்படக்கூடியதும், வழக்கமாக இருந்து வருவதுமான, ஆங்கிலமே போதும். இலக்கிய, இலக்கண வளமற்ற, தென்னாட்டாருக்கு எந்தவித சம்பந்தமும் இல்லாத ஒரு மொழியைத் தமிழர் சமுதாயம் நஞ்செண வெறுக்கின்ற, ஒரு லம்பாடி மொழியை, தேசிய மொழியாக்குதல் என்ற பெயரிலே தமிழர்கள் மீது திணிக்க முடிவு செய்துகொண்டு, திணிக்கும் வழிகளைத் தான் தேட வருகிறது கமிஷன். ஆகவே, இது தென்னாட்டில் நடத்தப் போகும் விசாரணை, வழக்கம்போல நமக்கு எந்த நன்மையையும் செய்யாது என்று முடிவு கட்டிக்கொள்ளலாம்.

அரசியல் சட்டப்படி இந்தி தேசிய மொழி என ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்டதாகவும், ஆகவே, வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வி அர்த்தமற்றதெனவும், வாதிடப்படுகிறது தேசியத்தாரால். கமிஷனும் அதையேதான் முடிவாக்கிக்கொண்டு இங்கு வருகிறது எனவே இது போன்ற கமிஷன்களைத் திராவிடர்கள் துளிக்கூட நம்பமுடியாது. இந்தி புகுத்தப்படுவதை ஒரு மூச்சாக எதிர்த்து நிற்பதிலேயே கவனம் செலுத்தவேண்டும். உயிர்கொடுத்துத்தான் அதைச் சாதிக்கமுடியுமென்றால், நம் தாய் மொழியைக் காக்க, உயிர் கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும். அந்த நிலைக்கு ஆட்சியாளர் நம்மைக் கொண்டுவந்து நிறுத்துகின்ற நாளே, திராவிடநாட்டுப் பிரிவினை நாளாகவும் ஆகிவிடும்.

இயக்கத் தோழர்கள் கவனத்திற்கு

இந்தி கமிஷன் விஷயமாக, தேசியப் பத்திரிகைகளில் வந்துகொண்டிருந்த செய்திகளை வைத்து எழுதப்பட்ட ஒரு கருத்தினை 'எண்ண'த்தில் தாங்கி இவ்விதழின் சில பிரதிகள் சிலஊர்களுக்குச் சென்றுவிட்டன. கமிஷன் வரும் நோக்கம் பற்றிய சில தேசியப் பத்திரிகைகளின் தவறான வியாக்கியானத்தாலும், சில தவறான செய்திகளாலுமே அது நேர்ந்தது. மேலே கண்டுள்ள 'எண்ணம்'தான் சரியானது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்- தோழர்கள் திருத்திக்கொள்ளவேண்டுகிறோம்.

[ஆ—ர்.]

தலைமைக் கழகம்: அறிக்கை—24|55

இந்திக் கமிஷன் பற்றி:

"ஹிந்தி கமிஷன் முன் சாட்சியம் கொடுக்க ஸ்ரீ அண்ணாதுரை தயார்," என்று தலைப்பிட்டு, "தி. மு. க. தலைவரான ஸ்ரீ ஸி. என். அண்ணாதுரை மட்டும் கமிஷன் முன்பு சாட்சியம் கொடுக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்," என்று, டாக்டர் சுப்பராயன் அவர்கள் நிருபர் பேட்டியில் கூறியதாக, 'சுதேசமித்திரன்' வெளியூர் ஆகஸ் 10, 1955 இதழில் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது. இந்தச் செய்திக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமைக் கழகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

"இந்திய யூனியன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் இந்திக் கமிஷன் (அரசியல் மொழிக் கமிஷன்) 'இந்தி வேண்டுமா அல்லது வேண்டாமா' என்று கேட்கவில்லை; 'இந்தியை எப்படி எப்படியெல்லாம் புகுத்தலாம்' என்று ஆலோசனை கேட்கவே வருகிறபடியால், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திக் கமிஷனின் அழைப்பை ஏற்றுக்கொள்ளவோ, அதற்கு ஆலோசனை கூறவோ உடன்படாது என்பதை, இதன்மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

'அறிவகம்,"
சென்னை.
12-8-1954

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்-

2000 வெண்பாக்கள்

வெண்பாப்போட்டி 10-க்குப் பிறகு, ஒவ்வொரு ஈற்றடிக்கும் ஏறத்தாழ2000வெண்பாக்கள்வந்துசேர்கின்றன. **'வாள்கொண்டு தாக்குவோம் வா'** என்ற ஈற்றடிக்கு மட்டும் 2200 வெண்பாக்கள் வந்திருந்தன. அவைகளில் முதல் நாற்பத்தைந்து வெண்பாக்களை கடந்த இரண்டு இதழ்களிலும் பிரசுரித்திருந்தோம்; மிகுதியை இந்த இதழில் பிரசுரித்திருக்கிறோம்.

தென்றலின் வெண்பாப் போட்டியில் ஒவ்வொரு ஈற்றடிக்கும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட தோழர்கள் கலந்து கொள்வதால், இனிமேல் ஒவ்வொரு மாதத்தின் கடைசி இதழில் மட்டும் வெண்பாப் போட்டிக்கென மூன்று பக்கங்களை ஒதுக்க முடிவு செய்திருக்கிறோம். வெண்பாக்களைத் தரம் பிரித்து, முதல் இரண்டு தரங்கள் வெண்பாக்களோடு பிரசுரிக்கப்படும். மீதமுள்ள தகுதி பெற்ற வெண்பாக்களில், அவைகளை இயற்றியவர்களின் பெயர் மட்டும் பிரசுரிக்கப்படும். நிற்க.

'தென்றல்'-அதன் சார்பில் ஒரு இலக்கியக் கழகத்தை நிறுவ முடிவு செய்திருக்கிறது. வெண்பாப்போட்டியில் கலந்து கொள்ளும் அத்தனை பேரும் அதில் உறுப்பினர்களாகக் கருதப் படுவார்கள். இதுவரை வெண்பாப் போட்டியில் கலந்து கொண்டோரின் பெயரும் முகவரியும் அடங்கிய பட்டியலொன்றைத் தயாரித்து ஒவ்வொருவருக்கும் அனுப்பப்படும். இது பற்றிய முழு விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

—ஆர்.

வேலங்குடித் திருவிழா

ஏஜண்டுத் தோழர்களின் கவனத்திற்கு

அடுத்த இதழில், ஆசிரியர் கண்ணதாசன் எழுதும் வேலங்குடித் திருவிழா - தொடர்கதை ஆரம்பமாக இருக்கிறது. வாசகர்கள் எதிர்பார்க்கிறபடி, கதையிலே சுவையும், அதனால் பயனும் கிடைக்கும். விளம்பரச் சுவரொட்டிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. தேவைப்படும் அதிகப்படியான பிரதிகளுக்கு செவ்வாய்க் கிழமைக்குள் அறிவித்துவிடக் கோருகிறோம். எக்காரணத்தை முன்னிட்டும் பிரதிகள் வாபஸ் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

—நிர்வாகி.

வாழியவே!

கதிரன்

"கண்ணே, காதலால் நாம் கட்டுண்டோம். ஆனால் சமூகம் நம்மைப் பிரித்திடுகிறது. நான் வேறு ஜாதியினன் என்கிறகாரணத்தானா? அது அவ்வளவு பிரமாதமான தடையாய் அமைந்திடவில்லை என்றே கருதிடவேண்டியிருக்கிறது. ஜாதி வித்தியாசங்களை சமூகம் அதிகமாகப் பொருட்படுத்துவதில்லை. இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பகுத்தறிவுக் கதிரவன்முன் ஜாதி வெறியர் கொட்டம் அடங்கியிருக்கிறது ஓரளவிற்கு! உண்மை என்ன உனக்குத் தெரியுமா? நானோர் ஏழை! குபேர சம்பத்திலிருக்கும் உன் கரம் பற்ற, நான் விழைந்திடுங்கால் சமூகம் தனது ஆயிரம் தலைகளுடனும் ஆயிரம் விட நாக்குகளுடனும் நம் இருவர் மத்தியிலே வீறிட்டெழுகின்றது. அதனைத் தகர்த்தெறிய உனக்குத் துணிவு இருக்கிறதா? மெல்லியலார் சபலபுத்தியுடையார் என்று ஆன்றவிந்தடங்கிய ஆன்றோர் கூறிப் போந்தனரன்றோ?"

"அன்பரே, தாங்கள் அவ்வாறு சொல்லக்கூடாது. நான் குபேர சம்பத்துள்ள குடும்பத்தில் தோன்றியவளென்று நீங்கள் சொல்லும் போதுதான் எனக்கு அது நினைவிற்கு வருகின்றது. அத்தகைய நிலையொன்று என்னை சூழ்ந்திருக்கிறது என்பதே எனது நெஞ்சத்தின் அடிதளத்திலுங்கூட என்றைக்கும் இருந்ததில்லை; இன்றும் இல்லை-காரணம், நான் அதைப் பொருட்டாகக் கருதுவதில்லை. கண்ணான காதலர் தாங்கள் உவகையுடன், ஆசையுடன், அன்புடன் 'இனியாளே, என் ஆசைக்கிளியாளே' என்று கொஞ்சுவது பல கோடி பெறுமே! அந்தப் பாக்கியத்தில் இந்த ஆழிசூழ் உலகத்தையும் உங்களையும் தனித் தனியே வைத்து 'இரண்டனுள் ஏதாவதொன்றை எடுத்துக்கொள்' என்று என்னை எவரேனும் கேட்டிடில், நீங்கள் நம்பவேண்டும் நான் சொல்லுவதை, தட்டின்றி உங்களையே. மறு யோசனையின்றி என் உயிரினுமினியவரையே எனக்கென எடுத்துக்கொள்ளுவேன்."

"இன்பக்களஞ்சியமே. நீ இவ்வமயம் ஆவேசத்தில் உணர்ச்சி வயப்பட்டுக் கூறுகிறாய். உன்னுடைய உண்மை அன்பு என்றென்றைக்கும் நிலைத்திருக்கவேண்டுமே; அதைப் பற்றி சிந்தித்தாயா? உன்மீது வீணில் சந்தேகம் கொண்டுள்ளேனென்று எண்ணிவிடாதே. காதல் வேறு, கடமை வேறு, வாழ்வு வேறு என்பதாக அமைந்துள்ள நம்நாட்டு நிலைமை, பெரும்பாலான இளம்காதலர் உள்ளங்களிலே சஞ்சலத்தைத் தோற்றுவித்து இன்பக் காதலை வீணாக்குகின்றது. நான் சொல்லுவது உனக்குப் புரியாத புதிராயிருக்கலாம். நீயும் நானும் சமூகத்தை உதாசீனம் செய்து குள்ளநரி மனிதரை எள்ளி நகையாடி பழமை விரும்பிகளை வெறுத்து ஒருமித்த காதலரென இணைந்து விடுகிறோமென்று வைத்துக்கொள், பிற்காலத்திலே நம்மிருவர் இல்வாழ்க்கை இவ்வண்ணமாய்த்தான் இருந்துவிடும் என்று இப்போதே முடிவுகட்டிவிட முடியுமா? வரண்ட வாழ்க்கையிலே உழலவேண்டி ஏற்பட்டால் 'பெண்புத்தி பின்புத்தியாகிவிட்டதே முன்னரே அருமைத் தாய்தந்தையர் அறிவுரை கூறியபடி அத்தான் கோபாலகிருஷ்ணனை மணந்திருந்தால் எவ்வகை உல்லாச வாழ்வு வாழ்ந்திருப்பேன்! ஏதுமற்ற ஏழையொருவனைத் திருமணம் செய்துகொண்டு படுகின்ற பாடுபோதும், போதும் பாரப்பா, காதலாம் காதல், கத்தரிக்காய்,' என்று எண்ணாத எண்ணமெலாம் எண்ணி எண்ணி எட்டாத பேராசை கோட்டை கட்டி வருத்தமடையக்கூடாதே என்பதற்காகத்தான் இவ்வளவு சொல்கிறேன்."

"உங்கள்மீது ஆணை; ஒளிவிசும் திங்கள்மீது ஆணை; உலக முதன்மொழி தமிழின்மீது ஆணை; என்மீது ஆணை; இப்பரந்த வையகத்தின்மீது ஆணை. உங்களையன்றி வேறொரு ஆண்மகனை கனவிலும் நினைத்தறியா நான் உங்களுடன் வாழ்க்கைத் துணையாக இல்லறம் நடத்துங்கால், காலமெல்லாம் துன்பமே ஏற்படினும், நாளெல்லாம் நலிவே நேரிட்டாலும் அத்துன்பத்தை இன்பமாக, அந்நலிவை இன்பக்களியாட்டமாக ஏற்றுக்கொள்வேன். நான் சபலபுத்தியாலும் பேசவில்லை; பின்புத்தியாலும் பிதற்றவில்லை; ஆவேசத்திலும் கூறவில்லை. என் உளந்திறந்து சொல்லுகின்றேன். சங்கநிதி, பதுமநிதி வேண்டேன். என் ஜீவ ஆனந்தம் தயாநிதிதான் வேண்டும். தாங்கள், ஐயையல் என்னைக் கைவிடலாகாது. தாங்கள் தான் என் மூச்சு, இன்னுயிர். சோதனை போதாதே? அன்பரே, என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

நிர்மலா தயாநிதிமீது சாய்கிறாள். அவன் அவளைத் தழுவுகிறான். 'சரி' என்ற வார்த்தைக்கே அந்த நிலையில் இடமில்லைபோலும். ஒரே நிசப்தம் ஒரு நிமிடநேரம், பின் மூன்று நிமிட நேரம் பெருத்த கைதட்டல்.

★

கல்லூரி ஆண்டு விழாவின்போது மாணவர்கள் நடித்துக்காட்டிய 'காதலோ காதல்' என்ற நாடகத்தைக் கண்ணுற்ற மாணவர்களும் மாணவிகளும், ஆசிரியர்களும் பிறரும் கதாநாயகனாகவும் கதாநாயகியாகவும் நடித்த வசந்தன், சுகுமார் ஆகிய இருவரையும் வெகுவாகப் பாராட்டினர். விழா முடிவுற்றதும் அவரவர் தம்தம் இல்லமேகினர்.

நீண்ட சாலை வழியே சுகுமாரும் சந்திராவும் கைகோர்த்தவண்ணம் இன்பபுரியில் சஞ்சரிப்பதாக எண்ணிக்கொண்டு. அடிக்கடி காதல் வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டு நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

"என்ன பிரமாதமான நடிப்பு! என்னிடத்தில் அன்பு வைத்திருப்பதாக வர்ணிப்பதெல்லாம் கூட வெறும் நடிப்புத்தானா?"

"சந்திரா, என்ன நீ இவ்வாறு கூறுகிறாய். நாடகத்திற்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமுண்டா?"

"ஆஹா, என்ன சாகசம்? நானேன் தயாநிதி வேடத்தில் தோன்றி நடித்திருக்கக் கூடாது என்றுதான் வருந்தினேன். நாடகம் நடந்த அவ்வளவு நேரமும் எல்லோரும் தங்களை மறந்து உங்களைப் பார்த்துக் கொண்டிருக்க, நான்மட்டும் விசாரத்துடனிருந்தேன். கதாநாயகன்மேல் நீங்கள் சாய்ந்தபோதும், அவன் உங்களைத் தீண்டியபோதும், என் உடல் முழுவதும் இரும்புமுட்கள் கொண்டு குத்துவதுபோலிருந்தது."

"எனக்குமட்டும் அந்தத் தடியன் மீது சாய்ந்திருக்க ஆசையா? நாய் வேடம் போட்டால் குலைத்துத் தானே தீரவேண்டும் நடிக்க வேண்டியிருக்கிறதே என்பதற்காகத்தான் அவன் கரங்களைப் பற்றியதும், அவனுடன் அவ்வளவு நேரம் சல்லாபமொழி பேசியதும். நாடகம் நடந்த இரண்டு மணி நேரமும் உன்னையேதான் பார்த்துக்கொண்டிருந்தேன். நீ பெண்கள் பகுதியில் இரண்டாவது வரிசையில் உட்கார்ந்துகொண்டு தூங்கிவிழுந்து கொண்டிருந்ததையும் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் சொல்லுவதை நீ நம்ப மறுப்பாய். என் பேச்சை நம்பிவிட்டால் தான் உனக்கு இரவு பூராவும் தூக்கம் வராதே."

"ஆம் எனக்கு இரவில் தூக்கம் வருவதில்லை தான். நல்ல தூக்கம் தூங்கி ஓராண்டாகிவிட்டது. உங்களுக்கெப்படி என் நிலை தெரியப் போகிறது. நீங்கள்தான் இரண்டு தெருக்களுக்கப்பால் குறட்டை விட்டு உறங்கிக்கொண்டிருப்பீர்களே!"

"நான் குறட்டை விட்டுத் தூங்குகிறேனா? உன்னிடம் யார் அப்படிச் சொன்னது?"

"உங்கள் தங்கை எனக்குச் சொல்லிற்று."

"அந்தப் போக்கிரி பொய்கூட சொல்ல ஆரம்பித்துவிட்டதா? அது சரி சந்திரா, நீ ஏதாவது என் தங்கையிடத்தில் நம் விஷயத்தை மூச்சு விட்டு விட்டாயா?"

"இல்லையே! நான் விஷயத்தை மூச்சு விடவில்லை. என் சரித்திரபுத்தகத்தில் உங்கள் புகைப்படத்தைத் தவறுதலாக வைத்திருந்தேன். அவள் கைக்கு அது எப்படியோ கிடைத்துவிட்டது. 'என்ன சமாசாரம்' என்று என்னைத் தொல்லைக்காளாக்கி விட்டாள். உடும்புப் பிடிக்குக் கட்டுப்பட்டு, உள்ளதைக் கூறிவிட்டேன். அடுத்த விநாடியே 'அண்ணி' என்று என்னைப் பரிகசிக்கத் தொடங்கிவிட்டாள்."

"அப்படியா சேதி. இரண்டு நாட்களாக என்னை 'சந்திரகாந்தன்' என்று கூப்பிட்டுக்கொண்டிருக்கிறது. காரணம் புரியாமல் திகைத்தேன்... உன்னைச் சொல்லி என்ன பயன்? இந்தப் பெண்களே இப்படித்தான். எந்த ஒரு விஷயத்தையும் ரகசியமாக வைத்துக்கொள்ளத் தெரிவதில்லை."

"இதற்கா இவ்வளவு கோபம்? ஆசையெல்லாம் கொள்ளைகொண்ட சுகுமார், உங்கள் தங்கை மிகவும் நல்லவள். நமக்குத் துணை செய்வாள். நான் அவளிடத்தில் மூச்சு விட்டமாதிரி வேறெவரிடத்திலும் அவள் மூச்சு விடமாட்டாள். நீங்கள் அவளுக்குத் தெரிந்து விட்டதே என்று கவலைப்படாதீர்கள். நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம். நானிருக்கப் பயமேன்!"

"சாயிபாபாவின் மறுபிறவிபோல் பேசுகிறாயே!"

"அந்தப் போலி மனிதர்களைப் பற்றி என்னிடத்தில் விளையாட்டுக்குக்கூட பேசக்கூடாது. அந்தப் பாபா, இந்தப் பாபா ஆகியவர்களிடத்தில் நீங்கள் மோகங் கொள்ள ஆரம்பித்தால் என் கதி அதோ கதி தான்."

"அவ்வாறெல்லாம் நினைக்காதே, சந்திரா. உன்னைத் தவிர இந்த ஈராண்டு காலம், அதாவது நாம் கல்லூரியில் முதன் முதல் சந்தித்த நாள் முதலாய், வேறு எவருக்கும் என் இதயத்தில் இடமளித்ததில்லை."

"சுகுமார், எனக்குத் தெரியாதா உங்கள் குணம்."

"உன் வீட்டிற்கு வெகு சமீபத்தில் வந்துவிட்டோம். இனி நான் பிரிந்து செல்லவேண்டியவன் தானே! சந்திரா, நாளை மறந்துவிடாதே, மாலையில் கடற்கரை வருவதற்கு. கண்ணே, பேசாமல் போகிறாயே! 'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகக் கூடாதா?"

"தங்கள் விருப்பம் என் பாக்கியம். இப்போது ஜாக்கிரதையாய்ப் போய் வாருங்கள், சந்திரா காந்தன்."

கைவளை குலுங்க சந்திரா தனதில்லமேக, சிரிப்பலை மோத தன் வீடு நோக்கி நடந்தான் சுகுமார்.

மாதங்கள் சில உருண்டோடின. சுகுமாரும் சந்திராவும் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றார்கள். திருமணப் பேச்சு இருவர் வீடுகளிலும் எழவே செய்தது. எதிர்பார்த்தபடி தடையுத்தரவுகள், சுடுசொற்கள், கோபாவேசங்கள், தடங்கல்கள் தாண்டவமாடின. எல்லாம் சிலநாட்கள் தாம். ஆணழகனும் ஆரணங்கும் பெற்றார், உற்றார் உறுமலை உதாசீனம் செய்து பதிவுத்திருமணம் செய்துகொண்டனர். இன்பவாழ்வு வாழத் தலைப்பட்டனர்.

முன்னோர் நாள் 'தயாநிதி'யும் 'நிர்மலா'வும் நாடகத்தில் நடத்திக் காட்டியது முற்பகுதி; வாழ்க்கை விசித்திரத்தின் பிற்பகுதியை இன்று உண்மையில் சுமூகமாக நடத்திக்கொண்டிருக்கின்றனர் சுகுமாரும் சந்திராவும்!

'அண்ணாதுரை'

ஆசிரியர் கண்ணதாசன் துணைவி பார்வதியம்மையாருக்கு ஜூலை 22-ம் தேதி பிறந்த ஆண்மகவுக்கு அண்ணாதுரை என பெயரிடப்பட்டது. தாயும், மகனும் நலம்.

சாவு தேடவில்லை! சாவைத் தேடினன்!

தோகைமயிலே, நெடுநாட்களுக்குப் பின் உனது கடிதம் கிடைக்கப் பெற்றேன். நெஞ்சிலே குவிந்து கிடந்த பாரம் குறைந்திருக்கிறது. நீ அடிக்கடி கடிதம் எழுதுவதில்லை தான் என்றாலும், அரிதாகக் கிடைக்கும் உனது கடிதம் நல்ல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தூண்டக்கூடியதாக அமைந்துவிடுகிறது. அந்த வகையிலே எனக்கு மகிழ்ச்சிதான். இரண்டு மாதம் இடையிலே கழித்து நீ நேற்று எனக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் முக்கியமான ஒரு பிரச்சினையை தீர்த்துவைக்கும்படி கேட்டிருக்கிறாய். நேற்று இரவு முழுதும், இந்தப் பிரச்சினையை என்னால் தீர்த்துவைக்க முடியுமா என்று என்னையே நான் அடிக்கடி கேட்டுக் கொண்டே இருந்தேன். உலக உத்தமர்களின் தியாகத்தை எடை போட்டுப் பார்த்து, யாருடைய தியாகத்திற்கு-தொண்டுக்கு அதிக 'பளு' உண்டு என்று என்னைக் கேட்டிருக்கிறாய். இது மிகமிகச் சிக்கலான கேள்விதான். கொம்பிலே பழுத்த கொய்யாக்கனி சிலருக்குப் பிடிக்கும், வீட்டிலே பழுக்க வைத்த வாழைப்பழம் வேறு சிலருக்குப் பிடிக்கும்; இன்னும் சிலர் சேலத்து மாம்பழம் தான் சர்க்கரைக்கு ஒப்பானது என்பார்கள். இவர்களில் நீ எந்த வகையில் இணைந்திருக்கிறாய் என்பதை என்னால் சொல்லமுடியாது; அதைப்போலத்தான் நீயும் என்னைப்பற்றிகணித்திருக்கக்கூடும்.

மனிதர்கள், கனியின் சுவையை அனுபவிக்கிறார்கள்; தியாகத்தின் மாண்பை மதிக்கிறார்கள். ஆனால், பழுத்த கனியை மக்கள் உடனே சுவைத்திட முன் வருவதைப்போல, உத்தமர்களின் தொண்டு, தியாகவம் உடனுக்குடன் மதிப்புப்பெறக் கூடியது அல்ல 'ஆகாத காரியங்கள் செய்கிறான்' என்று இகழப்பட்டவன், இடித்துரைக்கப்பட்டவன் ஐம்பதாண்டுகளுக்குப் பிறகுதான் மதிக்கப்பட்டிருக்கிறான் 'காலி' என்ற பட்டம் 'கர்மவீரன்' என்று மாறுவதற்கு எத்தனையோ பேருடைய 'இளமை வாழ்வு' பலி பலிபீடத்தில் ஏற்றப்பட்டிருக்கிறது. காசைக் குவித்து வைத்துக் கொண்டு காதல் துரையோடு வாழ்வோம் என துடிதுடித்த எத்தனை இளம் பெண்களின் புதுமைக் கனவுகள், இளைஞர்களின் இலட்சிய தாகத்தால் தகர்ந்துபோயிருக்கின்றன தெரியுமா? அப்படிப்பட்டவர்களில், யாரை உயர்த்திக் கூறுவது என்று கேட்டிருக்கிறாய். தியாகிகள் அத்தனை பேருடைய ரத்தமும் சிவப்புத்தான்" என்றாலும், தியாகிகள் அத்தனை பேருடைய உடலிலும் விழுந்தது குறுத்தடியின் முத்திரைதான் என்றாலும் என் மனதில் பட்டதை நான் சொல்லுவதென்று தீர்மானித்துவிட்டேன்- சீறுவர் சிலர்; தேசபிதாவை குறைத்து மதிப்பிடுகிறானே என்பர்; கவலையில்லை!

தேசத்திற்குத் தொண்டுசெய்ய எண்ணி களத்திலே குதித்தவர்கள் அத்தனைபேரும் சாகத்துணிந்தவர்கள்தான்; சர்க்கார் அடக்குமுறைகளை எதிர்பார்த்தவர்கள்தான்; ஆனால் அவர்களிலே பலர், தாங்கள் நினைத்ததற்கு எதிரிடையாக, தங்களைக் காட்டிலும் மற்றவரின் தியாகம் மாற்றுக்கூடப் பெற்றது என்று மக்கள் எண்ணிவிடத்தக்க வகையிலே எதிர்பாராத விதமாக செத்துவிட்டிருக்கிறார்கள். அதனால் அவர்களின் தியாகம் குறைகூறத் தக்கது என்று சொல்லவில்லை; காரணம். எப்போதுமே தியாகத்திற்கு தலைவணங்கும் புனிதமான ஒரு விடுதலைப் படையைச் சேர்ந்தவன் நான்.

அடிமைத்தளையறுத்த ஆப்ரஹாம் லிங்கன் கூத்தரங்கில் அமர்ந்திருந்த வேளையில் குண்டுக்குப் பலியானார். லிங்கன், நாடக சாலைக்கு வரும்போது, தான் சாகப் போவதாக எண்ணி வரவில்லை. ஆனாலும் செத்துவிட்டார். ஆனால், கூத்தரங்கிலே 'உன்னைக் சொல்லப் போகிறேன்' என்று யாராவது முன் கூட்டியே மிரட்டியிருந்தாலும் லிங்கம் அஞ்சக்கூடியவரல்ல.

லியாகத் அலிகான்-இவர்மக்கள் மன்றம் ஏறுமுன்பாகதான் வெறியன் ஒருவனால் சுட்டுக்கொள்ளப் போவதாக அவருக்குத் தெரியாதுதான். அவ்வாறு முன்கூட்டி அறிவிக்கப்பட்டாலும் லியாகத் அலிகான் மருட்சிகண்டு மேடைக்கே வந்திருக்கமாட்டார் என்று சொல்லமாட்டேன். எதிர்ப்புக் கிடையேயும் குறுகிய நிலப்பரப்பைக் கட்டியாளமுடியும் என்று அறை கூவல் விட்ட இஸ்லாமியத் தலைவர் அவர்.

அவுங்சான், பர்மாவின் விடுதலைக்குப் பாடுபட்டபெருவீரன்.

உயிரை பணயம்வைத்து தாயகத்திற்குப் பாடுபட்ட மக்கள் தலைவன். பமர்ா குடியரசாவதைப் பார்த்துவிட்டுத்தான் சாவோம் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் அவுங்சான் பர்மாவின் அரசியல் நிர்ணய சபையில் பேசிக் கொண்டிருக்கும்போது, முன்னாள் மந்திரி ஊசோவின் ஏவலாட்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவுங்சானின் முடிவு இப்படி நேராமல், 1937 ல் டாக்டர் பாமாவின் அடக்குமுறைக்கு எதிராக புரட்சி செய்த நேரத்திலே சுட்டுக்கொல்லப்பட்டிருந்தால் அந்தச் சாவுக்கு வேறு வகையான கியாதி கிடைத்திருக்கும், அதற்காக அவுங்சானின் அரசியல் நிர்ணய சபைச் சாவால் அவர் புகழ் மங்கிவிட்டது என்று சொல்ல வரவில்லை. சாவின் முடிவின் தரத்தைத்தான் எடை போடுகிறார்கள். என்பதற்காக இதையெல்லாம் சொல்லுகிறேன்.

மோகனதாஸ் கரம்சந் காந்தி -இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட வீரத்திலகம், அவரைப் பஜனைக் கூட்டத்திலே கொன்று 'பாவி'ப் பட்டம் பெற்றான் ஒருவன். காந்தியார் நாட்டிலே சிந்தியிருக்கிற வியர்வைக்கு, விழி நீருக்கு, ரத்தத்திற்கு, அவர் பஜனை மடத்திலே செத்திருக்கக்கூடாது. தோகைமயிலே! உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது அவரைச் சுட்டிருந்தால், நவகாளி யாத்திரையின்போது அவரைச் சுட்டிருந்தால், நாதுராமால் கொல்லப்பட்டதைக் காட்டிலும், நவகாளிச் சாவு, உப்புப் போர்ச் சாவு மேலும்மேலும் கீர்த்தி தரத்தக்கதாய் அமைந்திருக்கும். தனிப்பட்ட ஒருவனின் துப்பாக்கியைக் காட்டிலும் தரணியாளும் சர்க்கார் சிப்பந்தியின் துப்பாக்கிக்கு கௌரவம் அதிகம் என்று நான் சொல்லவில்லை. உப்புப் போரும், நவகாளி யாத்திரையும், காந்தியார் சாவை எதிர்பார்த்துப் பயணப்பட்டதாகும். ஆனால் அவர் பஜனை மடத்திற்குப் போகும்போது சாவை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. எதிர்பாராத சாவைக் காட்டிலும், எதிர்பார்த்துச் சாவதைத்தானே மக்கள் பெரிதும் போற்றுகிறார்கள்! பஜனை மடத்தில் எதிர்பாராதவிதமாகச் செத்தார் என்பதற்காக, அந்தப் பரங்கியர் வைரியை யாரும் துணிவற்றவர் என்று சொல்லிவிடமுடியாது. அப்படிச் சொன்னாலும், அவை அவர்களின் பொறுமைக் குணத்தாலும், பொல்லாங்கு கலக்காத பொதுப் பணியை விரும்பாததாலும் வெடித்துக்கிளம்பிய சொற்களாகத்தான் இருக்க முடியும்! "உம்மை பஜனைக்கூடத்திலே, எனது சுழல்துப்பாக்கியின் ரவைகளுக்கு சுவைமிகு உணவாக்கப்போகிறேன்" என்று கோட்சே முன்கூட்டித் தெரிவித்திருந்தாலும் காந்தியார் ராமபஜனைக்கு வரமாட்டேன் என்று சொல்லியிருக்கமாட்டார், ஆனால் முன்கூட்டியே ஒரு நல்லகாரியத்தை மட்டும் செய்திருப்பார், அகில இந்தியக் காங்கிரசைக் கலைத்துவிட்டு பஜனைக் கூட்டத்திற்கு வந்திருப்பார்!



இவர்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், ஒரு தனி மனிதனின் கோர முடிவு நம் நெஞ்சை உலுக்கத் தொடங்குகிறது. சாவின் துயரை - ஒவ்வொரு அங்கமும் உணர்வுஇழக்கும் வேதனையை அணு அணுவாக அனுபவித்துச் செத்த அந்த வீர மனிதனின் பெயர் நம் உள்ளத்தில் - அந்தரத்தில் ஊஞ்சலாடுகிறது.

சாக்ரட்டீஸ்! - இவருடைய சாவுக்கும் மற்றவர்கள் சாவுக்கும் வித்தியாசமுண்டு. ஆனாலும் இந்த சிந்தனைச் சிற்பியின் சாவைப்பற்றி யாருமே கடந்த காலத்தில் புகழ்ந்ததாகத் தெரியவில்லை. தோகை, நீ மறந்துவிடக்கூடாது; மேலே சொல்லப்பட்டவர்களெல்லாம் எதிர்பாராமல் செத்து ஜெகத்தின் பாராட்டுதலைப் பெற்றவர்கள். ஆனால் சாக்ரட்டீஸ் அப்படியல்ல; இன்ன தேதி, இத்தனை மணிக்கு நீ சாகவேண்டும்; நாங்கள் கொல்லப்போகிறோம் என்று முன்கூட்டியே சர்க்காரால் அறிவிக்கப்பட்டு அதன்படி குறித்த நேரத்தில் கொலு மண்டபத்திற்கு - இல்லை கொலைக்களத்திற்குச் சென்று உயிரைப் பலியிட்ட உத்தமன். சாகப் போகிறேன் என்று சொல்லிச் சென்று தற்கொலை செய்துகொண்டவனல்ல; சாகடிக்கப்பட்டவன். ஆனாலும் அவனுடைய சாவை முந்திய நூற்றாண்டுகளில் பெருமைப்படுத்தாததற்குக் காரணம் என்ன? வஞ்சகமல்ல; அந்தநாள் மக்கள், சாக்ரட்டீசினுடைய சாவின் மகிமைக்குக் காரணமென்ன என்பதை உணராத காலம்—சிந்தனை வளராத காலம். சர்க்காரால் விஷம் கொடுத்துக் கொல்லத்தக்க கொடியவன் சாக்ரட்டீஸ் என்று கூட மக்கள் அவனைப்பற்றித் தவறாக முடிவு கட்டியிருக்கக்கூடும்.

அந்தக காலத்தை இந்தக் காலத்தோடு ஒப்பிட முடியாது. தகராறில் சம்பந்தப்பட்டவர்களில் எவன் முதலில் கத்தியை எடுத்தாலும் அவன் தோல்வி கண்டு இறந்தால் அவனையே மாவீரனாகக் கருதக்கூடியவர்கள் இந்தக்காலத்தில் இருந்தாலும், சாவின் தரத்தை மதித்திடக் கூடியவர்கள் வளர்ந்து வருகிறார்கள் இப்போது.

அன்புள்ள தோகை, நடந்தவை நடந்தபடியே கூறியிருக்கிறேன். நீயே உன் மனதிற்குள் தீர்மானித்துக்கொள்.

விற்பனையாகிறது!
ஈ.வி.கே.சம்பத் எழுதிய முடிசாய்ந்தது ..1-4-0..
வி.சிவப்பிரகாசம் பி.ஏ. எழுதிய முசோலினி ..0-10-0..
நீலா நிலையம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை 6

களம் 17

காட்சி : 17

இடம் : ஆய்தேவி இல்லம்.

நேரம் : பகல்.

அரைவழித் திறப்பு Halfway Opening

[ஆய்தேவி இல்லத்தில், ஆய்தேவி, அவ்வையார், மோனமா கவி, பெருங்குடி வணிகர் முத்தரசப்பர், செம்பியன் நாட்டார், அம்பிகாபதி ஆகியோர் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

மோன : குற்றம் குலோத்துங்கன் மீதே தவிர, கம்பன்மீதல்ல! மன்னன் கேட்கிறான்...மறுத்துவிட்டால் அந்த இடத்தைப் பிடிக்கக் கூத்தன் துடிக்கிறான்...என்ன செய்யமுடியும் கம்பனால் ?

அம்பி : ஏளனச் சிரிப்புச் சிரிக்கமுடியும்! "எதுக்கு உன் அரசாங்க மரியாதை! தாய்மொழிக்குப் பழிவந்துதான் கம்பனுக்குத் தரணியின் புகழ் கிட்டுமென்றால், ஊர் பெயர் தெரியாதவனாகவே வாழ்ந்துவிட அவனால் முடியும்!" என்று முகத்திலடித்தாற்போல் பதில் சொல்ல முடியும்!...ஐயா! எதிர்கால மக்கள் "கம்பன் பாடிய இராமகாதை" எனப் பேசுவார்களே தவிர, "குலோத்துங்கன் விருப்பத்திற்காகக் கம்பன் பாடியது" எனக் கூட்டிச் சொல்லமாட்டார்கள்!

அவ்வை : அது சரி! நடந்தது நடந்துவிட்டது. கம்பன் பிடிவாதக்காரன். நீ விட்டுக்கொடுத்துப் போ! விளைவைப் பொறுத்திருந்து கவனிப்போம்.

அம் : இல்லை. விளைவு நமக்குத் தெரியாது. அடுத்த தலைமுறைதான் அதை முழுக்க உணரமுடியும்!

செம்பியன் : நீ சொல்வது அனைத்தும் உண்மைதான்! ஆனால், இனி நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. இந்த நிலையில் கொதிப்பை அடக்கிக் கொள்வதுதான் விவேகம்.

மோனமா : மகனே! வயது முதிர்ந்தவன் நான். இரண்டு தலைமுறைகளைக் கண்டவன். உலகத்தை நன்றாக அறிந்தவன். ஒப்புக்கொள்கிறாயா ?

அம் : ஒப்புகிறேன்.

மோனமா : அப்படியானால் நான் சொல்வதை நம்பு. மக்கள் பழிப்பார்கள், பழிப்பார்கள் என்று ஒரேயடியாகச் சொல்லி விடாதே! "கேட்பார் பிணிக்கும் தகையராய்க் கேளாரும் வேட்ப மொழியும்" சொல்வளம் கொண்டவர்கள் சிலர் அழுத்தமாக, இராமகாதை உயர்ந்ததென்று பாராட்டினால், நாட்டுமக்கள் அனைவருமே கரந்தூக்கிப் பரிசளித்து விடமுடியும். கம்பன் பெரும்புகழ் பெற்றுவிடவும் முடியும்! ஆம்; அதுவும் நடக்கலாம்!

அம் : நடக்கலாம். ஆனால் மனச்சாட்சி ?

அவ் : அதை கம்பனிடமிருந்து குலோத்துங்கன் வாங்கிவிட்டான். எதிர்கால சந்ததிகளிடமிருந்து கம்பனின் காவியம் வாங்கிவிடும்.

அம் : ஒரு சமுதாயம், தலைமுறை தலைமுறையாக மனச்சாட்சியை விற்பதா !

மோன : ஈஸ்வர சிவனின் சமஸ்கிருத வெறிக்காகவும், குலோத்துங்கனின் விவேகமற்ற செயலுக்காகவும்...அது நடக்கத்தான் போகிறது! தடுக்கமுடியாது நம்மால் என்னும்போது, சஞ்சலப்பட்டு என்ன பயன் ?

[வெளியில் ரதம் வந்து நிற்கிறது. எல்லோரும் திரும்பிப் பார்க்கிறார்கள். அமராவதியும் மல்லிகையும் ரதத்தைவிட்டு இறங்கி, உள்ளே வருகிறார்கள்.]

மல் : பாட்டி!

அவ் : வாடியம்மா! வா! நலந்தானே!

மல் : நலந்தான்! இவர்கள்தான் இளவரசி அமராவதி! உங்களைப் பார்க்க ஆசைப்பட்டார்கள்! அழைத்துவந்தேன்.

அவ் : இவள்தானா! அழகாயிருக்கிறாளே!......(சிரித்து) சிறு வயதில் பார்த்தது......

அம : வணக்கம்.

அவ் : வாழ்க!

[அம்பிகாபதி, அங்கிருக்க மனமில்லாதவனாய், மோனமா கவியைப் பார்த்து...]

அம் : நான் போய் வருகிறேன் ஐயா!

மோன : போய் வா! மனதைத் திடப்படுத்திக்கொள். நடப்பதைக் கவனி. பார்ப்போம்.

[அவ்வையாரும் ஆய்தேவியும் மற்றவர்களும் அதை ஆமோதித்து, அம்பிகாபதியை வழியனுப்புகிறார்கள். நாலடி நடந்த அம்பிகாபதியின் பின்னால் அமராவதி வந்து,]

அம : வணக்கம்.

அம் : (திரும்பி) வணக்கம்.

அம : அரசவையில் நடந்தவை யாவையும் நானும் கண்டுகொண்டு தானிருந்தேன். நீங்கள் சொன்ன முடிவுதான் சரியான முடிவு. உங்கள் தமிழ் உணர்வு கண்டு உண்மையிலேயே நான் உள்ளம் பூரித்தேன். வாழிய நீங்கள்! வாழிய தமிழ்!

அம் : (சிரித்து) இந்த உணர்ச்சி உங்கள் தந்தைக்கு இருந்திருந்தால் தமிழுலகின் மானம் காப்பாற்றப்பட்டிருக்கும்! வருகிறேன்! வாழ்க!

[அம்பிகாபதி செல்கிறான். அந்தத் திக்கைப் பார்த்தபடி நின்ற அமராவதியின் முதுகில் மெல்ல மல்லிகையின் கை விழுகிறது. நிலை உணர்ந்த அமராவதி, திரும்பி அவ்வையார் அருகில் வருகிறாள். ஆய்தேவி அவளை அமரச் சொல்ல அமருகிறாள். மெல்ல மல்லிகையைப் பார்க்கிறாள். அந்தப் பார்வை, "எதிர்பாராமல் சந்தித்த அம்பிகாபதி, இன்னும் கொஞ்சநேரம் இருக்கவில்லையே! இனி இந்த இடத்தில் சுவையேது!" என்பது போலிருக்கிறது.]

—காட்சி முடிவு—

களம் 18

காட்சி : 18

இடம் : கம்பன் இல்லம்.

நேரம் : காலை.

[கம்பன் ஏடும் எழுத்தாணியும் கையிற்கொண்டு, சிந்தனையோடு அமர்ந்திருக்கிறான். அவன் எதிரே ஈஸ்வரசிவன், கையில் வால்மீகி ராமாயண ஏட்டுடன் அமர்ந்திருக்கிறான்.]

ஈஸ் : கம்பநாட! இரவெல்லாம் வால்மீகி இராமாயணத்தை ஆராய்ந்தோம். ஸ்ரீராமபிரானின் திருக்கல்யாண குணங்களை அதில் தரிசித்தோம். சீதையின "ஆற்றுப்போக்"கினைக் கண்டோம். அனைத்தையும் இனித் தமிழில் கொண்டுவந்து அழகு செய்யவேண்டியது உன் வேலை! வேலையல்ல; கடமை!

[கம்பன் மௌனம்]

என், இன்னும் சிந்தனையிலேயே இருக்கிருய்? கம்ப நாட! உலகம் உன்னைப் புகழ்வதற்கு வாயைத் திறந்த படி இருக்கிறது. தமிழ், தன்னிடத்தே ஒரு இணையற்ற காவியம் உண்டாவது பற்றி, ஆனந்தக் கூத்தாடுகிறது! உன் கையிலுள்ள எழுத்தாணியிலே, பொங்கி வழியட்டுமா என்று கேட்கிறது, தமிழ்வளம்! திருமாலும் சிவபிரானும், மானசீகமாக உன்னை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிருர்கள். நேற்றுவரை இல்லாத, நாளை வேறு யாரும் செய்யவும் முடியாத ஒரு மகா காவியம் இன்று துவங்கப்படப்போகிறது. கம்பநாட! எழுது! எழுது! சிந்திக்கும் விநாடியெல்லாம், சிவனும் திருமாலும், உன்னை நிந்திக்கும் விஞடியாகிவிடும்! உம்......

[கம்பன், ஏட்டில் எழுத்தாணியை வைத்தபடி]

கம் : முதலில் கடவுள் வணக்கம் - சிவவணக்கமா, திருமால் வணக்கமா ?

ஈஸ் : திருமால் வணக்கம்...(சிந்தித்து) ஓகோ! உனக்கு அதில் பழக்கமில்லையோ! சரி. இரண்டும் வேண்டாம். சாரீரகமீமாம்சையில் வியாசபகவான் கூறியதையொட்டி, பரம்பொருள் இலக்கணங்கூறி, சரணடைந்துவிடு! உம்... தாமதிக்காமல், சரணடைந்துவிடு!

கம் : வியாசபகவானை ஒட்டியா! (பரிதாபமாக) அதிலும் தழுவலா ?

ஈஸ் : தழுவலுக்கு வந்தபின், நழுவ நினைப்பது ஏன்! வேதனை இல்லாத வேலை! செய்துவிடு!

கம் : (எழுதுதல்) (படித்தல்)

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே!

ஈஸ் : சபாஷ்! தலைவர்களுக்குச்சரண் நாங்களே! நீ மட்டுமல்ல; நீங்கள்! நீ, குலோத்துங்கன், வடகலை, தென்கலை,வடுகு, கன்னடம்,வேறிடமுள பாடையாதொன்ருயினும் அதைப் பேசும் மக்கள் யாவரும் - சரணுகதி! சபாஷ்! கம்பநாட! உன் கவிதை, எல்லாத் திராவிடர்களையும் இறைவனிடத்துச் சரணடைய வைத்துவிட்டது - முதலிலேயே! அதுதான் கம்பன்! வேறு யார் அதைச் செய்யமுடியும்! சரி; அடுத்து...இன்னும் இரண்டு, கடவுள் வணக்கம் எழுது!

[எழுதுகிருன், படிக்கிருன்.]

சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை
எற்குணத்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்குணத்தவ னேமுத லோன்வன்
நற்குணக் கடலாடுதன ன்றரோ!

ஆதியந்த மரியென யாவையும்
ஓதினரல கில்லன வுள்ளன
வேதமென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாதமல்லது பற்றிலர் பற்றிலார்!

ஈஸ் : சபாஷ்! சபாஷ்!

கம் : அடுத்து, அவையடக்கம்.

ஈஸ் : கவிமுறைப்படி அவையடக்கம்! கம்பனுக்கு அது தேவையில்லை! ஆனாலும் பரவாயில்லை! எழுது!

கம் : (எழுதுதல்-படித்தல்)

வையமென்னை இகழவும் மாசெனக்(கு)
எய்தவும் இதியம்புவ தியாதெனில்
....

ஈஸ் : (இடைமறித்து) நில்! கம்பநாட! வையம் உன்னை இகழுமென்று ஏன் நினைக்கிருய்! மாசு உனக்கு எய்துமென்று ஏன் கருதுகிருய்?

கம் : நினைக்காமல் முடியுமாகுருதேவா! வையத்திலுள்ளோரெல்லாம், கம்பனல்லவே, "காசில்கொற்றத்து இராமன்" கதையை ஏற்கவும், அவன் கழலடி பணியவும்!

ஈஸ் : வேண்டியதில்லை! உலகத்தில் கம்பன் ஒருவன்தான்

இருக்கமுடியும்! கம்பன், தமிழ்வளம் கைவரப்பெற்றவன்; அவன் சொல்வதுதான் உலகிற்குச் சட்டம்! உலகம் அதைப் பின்பற்றித்தான் தீரவேண்டும்! ஆம்...உலகம், கம்பனுக்கு அஞ்சவேண்டுமே தவிர, கம்பன், உலகிற்கு அஞ்சவேண்டியதில்லை!

கம் : நான் அப்படி நினைக்கவில்லை......

ஈஸ் : ஏன் ?

கம் : கம்பன் இப்போது குற்றவாளி! குற்றவாளிக்குக் கோழைத்தனம் வந்துதான் தீரும்! நான் உலகிற்கு அஞ்சித்தான் தீரவேண்டும்! அதற்குச் சமாதானமும் சொல்லியாகவேண்டும். கண்ணகி கதையைக் குறிப்பிட்டானே அம்பிகாபதி, அரசவையில், அது அவன் கருத்துமட்டுமல்ல. தமிழுலகின் கருத்து! அந்தப் பண்புக்கு நேர் விரோதமானது, நான் எழுதப்போகும் காவியத்தின் கரு! என் மனதுக்கு அது நன்ருகத் தெரிகிறது! ஆனாலும்காலம், இடம்...என்னை இந்தச் சூழ்நிலையில் தள்ளிவிட்டது! எனக்கு ஆசையில்லையா என்பீர்கள்! இருக்கிறது! அதைத் தொடர்ந்து நியாயமான பயமும் என் நெஞ்சைக் கவ்வுகிறது! குருதேவா! இதற்குச் சமாதானம் சொல்லி-நான் செய்வதன் காரணத்தையும் கூறிவிட்டால், பரிதாபத்திற்கிரங்கியாவது, உலகம் இதை ஏற்றுக்கொள்ளும்! "இராமகாதை பாடும் சூழ்நிலை, இரங்கத்தக்க நிலையில் கம்பனுக்கு ஏற்பட்டிருக்கிறது! போகட்டும்" என்றும் உலகம் ஆறுதல் கூறும்! ஆகவே, இந்தக் கவியைத் தடுக்காதீர்கள்!

ஈஸ் : எனக்கு இதிலே விருப்பமில்லை! இது குற்றம் என நீதான் கருதுகிருய்! அதை நீயே வெளிப்படுத்துகிருய்! பின்னல், நியாயமென்று நம்புகிறவர்களைக்கூட, உன், இந்த அவையடக்கக் கவிதை, குழப்பிவிட்டுவிடும். எண்ணிப்பார்!

கம் : குழப்பத்தைத் தொடர்ந்து சமாதானமும் கூறுகிறேனே!

ஈஸ் : என்னதான் சமாதானம் சொன்னலும் இரண்டு வரியில், நீ குற்றமென்று கூறுவதைப் படிக்கிறவர்கள், ஏன், எப்படி, எந்த இடத்தில் என்று ஆராயப் புகுவார்களே தவிர, அடுத்த சமாதான வரிகளுக்குத் தாண்டமாட்டார்கள்.

கம் : ஐயோ! குருதேவா! நீங்களே என்னைக் கொன்றுவிடாதீர்கள்! நான் மாண்ட பிறகு என்ன நடந்தால்தான் எனக்கென்ன!

ஈஸ் : அந்தத் துணிவிருக்கும்போது இந்தக் கவிதையை எழுதாமலே விட்டுவிட்டால் என்ன!

கம் : இல்லை! நான் தமிழனுகப் பிறந்துவிட்டேன்! என் சமுதாயம், இப்படிக் கருதும் என்பது எனக்குத் தெரியும்! அதை நானே சொல்லிவிடுவதுதான் முறை! என்னைத் தடுக்காதீர்கள்! (எழுதுதல்-படித்தல்)

வையமென்னை இகழவும் மாசெனக்(கு)
எய்தவும் இதியம்புவ தியாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையினேன்புகல்
தெய்வமாக்கவி மாட்சி தெரிக்கவே!

(தொடரும்)

கண்ணதாசன்

1–10–55-அன்று
இலக்கியப் போட்டியின்
முடிவு விபரம் அறிவிக்கப்படும்.

உலகியற்றியான்...

2-ம் பக்கம் தொடர்ச்சி

பிரச்சினைக்குச் சம்பந்தப்படாதது - ஆகவே, விடுவோம். இப்போது, வந்த சந்தேகமே, "உலகியற்றியான்" என்ற சொல் யாரைக் குறிக்கும் என்பதே தவிர, வள்ளுவனின் கொள்கை பற்றியல்ல! அந்தச் சொல் ஆராய்ச்சிதான் நாமும் நடத்தினேம். அதில்தான் ஒரு முடிவும் கூறியுள்ளோம். (கொள்கை பற்றி வரும்போது-வள்ளுவன் நமக்குப் பக்கத்திலேயே நிற்பான்- அப்படி வரும்போது பார்ப்போம்!)

குறளைக் குறளால் அறியும் முறைப்படி நாம் காணும் முடிவு தான் மேலே உள்ளது. முழு முடிவையும் குறளே தருவதனால், மற்ற இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆய்தல் பயனற்றது. "இல்லை; அதுவும் வேண்டும்!" என யாராவது கேட்பார்களானால் அப்போதும் பதில் நமக்குச் சாதகமாகத்தானிருக்கிறது! நிற்க, "வள்ளுவன் ஆண்டவனைத் திட்டுவானா!" என்று அனுதாபத்தோடு கேட்கிறார், சிவஞானம்; ஏதோ, வளளுவனோடு ஒரே வட்டிலில் உண்டு, ஒரே கட்டிலில் உருண்டு, சுடுகாடு போம்மட்டும் துணையிருந்தவர்போல! அது ஆராய்ச்சியாளர் கூறும் வார்த்தையே அல்ல! காலத்தால் முந்தியவனின் எழுத்துத்தான் கருத்துக்கு ஆதாரமே தவிர, எழுத்தைக் கொண்டு தேடிப் பிடிக்கும் குணச் சித்திரமல்ல!

★

"என் நீங்கள் சிவஞானத்துக்குப் பதில் சொல்லி விளம்பரம் தருகிறீர்கள்;" என்று நண்பர்கள் சிலரும், புலவர்கள் சிலரும்கேட்பது தெரிகிறது. சரியோ தவறோ, தலைவனென்றிருக்கும் ஒருவரை, அறிவுடனே, இல்லாமலோ பின்பற்றச் சிலர், மிகச்சிலர் - இருப்பதாலே, அவர்களின் கண்களைத் திறந்து, "பார்த்தீரா உம் தலைவரின் அறிவுத்திறனை" என்று இடித்துரைப்பான் வேண்டியே பதில் சொன்னேன். படிப்பதில்-பொழுது வீணாகியிருந்தால் நண்பர்கள் மன்னிக்க!

முற்றும்.

கஞ்சாச் செடியும் குன்றக்குடியும்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

லுக்கு இலங்கிய, விஞ்ஞானம் சார்ந்த ஒழுக்கத்தை மதத்தின் பெயரால் வேண்டுமானாலும் வளர்த்துக்கொள்ளட்டும். ஆனால் தென்னாட்டிலும் நிர்வாணக் கோலம் அனுமதிக்கப்படும் என்று எதிர்பார்த்தால், தமிழ்த் தாய்மார்களே தீர்ப்பு வழங்கிவிடுவார்கள். தென்புலத்திற்கு, தமிழகத்திற்கு மதம் அவசியமில்லை. மதத்தால் வளர்க்கின்ற வெறிக்குணம் எப்போதுமே ரத்தச் சுவை கண்ட காட்டு விலங்கினத்தின் குணத்திற்கு ஒப்பானது. முடியாது! இனித் தென்னாட்டில் மதம் அரசோச்ச முடியவே முடியாது! நாதனின் திருவருளால் கடலுக்குள்ளே வாழ முடிந்தால் வாழ்ந்துபார்க்கட்டும், சுயேட்சையாக! பர்வத நாதனின் கருணை இருந்தால் மலைக் குகைகளில் அரசியல்வாதிகளின் தொல்லையில்லாமல் பொய் வாழ்வு நடத்தட்டும். நாட்டில்—மக்கள் மத்தியில் அந்த நிலையை எதிர்பார்த்து ஏமாறவேண்டாம்! —சவுத் கிங்.

இராமனுதபுர மாவட்ட

தி. மு. கழக பொதுக்குழுக் கூட்டம்

நாளது 14-8-55-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 3 மணிக்கு அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. உயர்நிலைப் பள்ளி வீதியிலுள்ள திரு. பி.வி.எஸ்.எம். இரத்தினம் அவர்களுடைய புட்ப மாளிகையில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் நாவலர், இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் நமது பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

அதுபோது ஆலோசனைக்கு வருபவை:

1. வரவு செலவு அங்கீகாரம்.
2. மாநில மாநாட்டு நிதி வசூல்.
3. புதிய விதிப்படி மத்திய பொதுக்குழுவுக்கு உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல்.
4. பொதுச் செயலாளருடனிருந்து புகைப்படம் எடுத்தல்.
5. உறுப்பினர்கள் கொணர்வன.

தங்களன்புள்ள,

இ.ல.ம. சௌந்திரபாண்டியன்,

செயலாளர், இராமநாதபுர மாவட்ட தி. மு. க.

வாழ்வது எப்படியோ?...

9-ம் பக்கம் தொடர்ச்சி

பஞ்சாலைகள் :

எண்	வடநாட்டில்	மூலதனம்
6	ருஸா (RAZA) டெக்ஸ்டைல்ஸ்	77,50,000
7	ஷினிவாஸ காட்டன் மில்ஸ்	64,80,000
8	ஸ்டேண்டர்ட் மில்ஸ்	68,00,000
9	ஸ்வதேஷி மில்ஸ்	90,00,000
10	சென்ட்ரல் இண்டியா ஸ்பின்னிங், வீவிங் அண்டு மான்யுபேக்சரிங் கம்பெனி,	96,87,500
11	எல்கின்மில்ஸ்	78,20,000
12	ஹிண்ட்மில்ஸ்	70,00,000
13	ஹுகும்சந்த் மில்ஸ்	60,45,000
14	மப்பட்லால் பைன்ஸ்பின்னிங் அண்டு மான்யுபேக்சரிங் கம்பெனி	87.00,000
15	மாடல் மில்ஸ்	94,91,850

5. ரூபாய் 1 கோடிக்குமேல் மூலதனம் போட்டு நடத்தப்படும் ஆலைகள்.

எண்	தென்னாட்டில்	மூலதனம்
1	பக்கிங்ஹாம் அண்டு கர்னாடிக் கம்பெனி	1,99,78 000
2	மதுரா மில்ஸ் (இரண்டுமே வெள்ளையர் ஆதிக்கத்தில் உள்ளவை)	1,75,02,480
	வடநாட்டில்	
1	ஆமதாபாத் மான்யுபேக்சரிங் அண்டு பிரிண்டிங் கம்பெனி	1,54,10,274
2	பாம்பே டையிங் அண்டு மான்யுபேக்சரிங் கம்பெனி	2,50,98,000
3	செஞ்சுரி ஸ்பின்னிங் அண்டு மான்யுபேக்சரிங் கம்பெனி	1,09,42,800
4	டெல்லிக்ளாத் அண்டு ஜெனரல் மில்ஸ்	3,74.34,973
5	இண்டியா யுனைட்டட் மில்ஸ்	2,50.00.000
6	கேஸோராம் காட்டன் மில்ஸ்	1,40,00,000
7	கோஹினூர் மில்ஸ்	1,00.00,000
8	ஸ்வதேஷி காட்டன் மில்ஸ்	2,10,00,000

மூலதனம்	தென்னாட்டில்	வடநாட்டில்
1 ரூ. 20 லட்சத்திலிருந்து ரூ. 40 லட்சம் வரை	14	26
2 ரூ. 40 லட்சத்திலிருந்து ரூ. 50 லட்சம் வரை	4	8
3 ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 60 லட்சம் வரை	1	12
4 ரூ. 60 லட்சத்திலிருந்து ரூ. 1 கோடி வரை	3	15
5 ரூ. கோடிக்குமேல்	2	8

தென்னாட்டின் மிகப் பெரிய நவீன தொழிலின் நிலையே இது வென்றால், மற்ற தொழில்களில் நமது நிலை எவ்வளவு பரிதாபகரமாக இருக்கும் என்பதை எண்ணுந்தொறும், எண்ணுந்தோறும் நெஞ்சே வெடித்துவிடும்போல் இருக்கிறது.

(தொடரும்)

பட்டமளிப்பு விழா

திருவாங்கூர் சகோதரிகள்

பத்மினி-ராகினி

இருவருக்கும் முறையே

'கலையரசி' 'கலைமணி'

என்னும் பட்டங்கள் வழங்கும்விழா 14-8-55 ஞாயிறு காலை 10 மணிகக்கு சென்னை மவுண்ரோட் கெயிட்டி தியேட்டரில் நடைபெறும்.

இத்துடன் இல்லற ஜோதி படக் காட்சியும் நடைபெறும்.

வருக! வருக!

பேராசிரியர் சுந்தரனார் நாடகக் கலைக் கழகம்,
சூளை, சென்னை—7.

நன்கொடை. 2-8-0, 1-14-0, 0-15-0, 0-8-0,

திருமண அழைப்பு

மணமகன். மணமகள்.
சி.டி. ஏகாம்பரம் — தனலட்சுமி

ஆகிய இருவருக்கும் 21-8-55 ஞாயிற்றுக்கிழமைக் காலை 7-30 மணிக்கு கண்ணதாசன் தலைமையில், தோழியர் அருண்மொழி முன்னிலையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும்.

அன்று மாலை 6. மணிக்கு சி. பி. சிற்றரசு மணமக்களைப் பாராட்டிப் பேசுவார். அதுபோது 'தீர்ப்பு' என்னும் நாடகம் நடைபெறும்.

இடம்: எண். 23. அருணசல முதலி தெரு. சௌகார்பேட்டை, (16-வது வட்டம்) சென்னை.

தாரைவட்ட தி. மு. க. பொருளாளர் திரு. கே.எஸ். சீரங்கராயக் கவுண்டர் அவர்களின் குமாரர் திரு கே. எஸ். பெரியசாமியின் துணைவியார் 6-8-55 சனி இரவு 8-20 மணிக்கு ஆண் குழந்தைக்குத் தாயானார்கள். அதன் நினைவாக தென்றல் வளர்ச்சிக்கு ரூ. ஒன்று அனுப்பப்பட்டது.

ஏஜண்டுகள் தேவை

தாத்தையங்கார் - பேட்டை
ஷிமோகா
கள்ளக்குறிச்சி
அகமதாபாத்
வண்டிப்பெரியார்
பழனி
திருவனந்தபுரம்
கொடுமுடி
திருவையாறு
கீரமங்கலம்
ஆயிக்குடி
வீரவநல்லூர்
பள்ளபட்டி (கரூர்)
கடையம்
எருமப்பட்டி
கொள்ளேகாலம்
பந்தல்குடி
பங்காரபேட்டை
உண்ணாமலைக்காடு
குரிச்சி (சேலம்)
கல்லக்குடி
ஒட்டன் சத்திரம்
நீடாமங்கலம்
பெட்டைவாய்த்தலை
மல்லூர்.

வாழ்வது எப்படியோ?

(7)

பஞ்சாலைகள்

2. ரூபாய் 40 லட்சத்திற்குமேல் ரூபாய் 50 லட்சம்வரை மூலதனம் போட்டு நடத்தப்படும் ஆலைகள்.

எண்	தென்னாட்டில்	மூலதனம்
1	எங்ஸோ பிரஞ்ச் டெக்ஸ்டைல் கம்பெனி (வெள்ளையர் ஆதிக்கம்)	48,00,000
2	பங்களூர் உல்லன் காட்டன் அண்டு சில்க்மில்ஸ் (வெள்ளையர் ஆதிக்கம்)	46,50,000
3	லாயல் டெக்ஸ்டைல் மில்ஸ்	48,89,500
4	ஸ்ரீ மீனாட்சிமில்ஸ்	49,05,030
	வடநாட்டில்	
1	ஆமதாபாத் அட்வான்ஸ் மில்ஸ்	43.00,000
2	கொலாபாலேண்ட் அண்டு மில் கம்பெனி	49,00,000
3	பிண்ட்லே மில்ஸ்	40,00,000
4	ஜெய்ஷ்ரீ டெக்ஸ்டைல்ஸ்	49,17,000
5	லட்சுமீ காட்டன் மான்யு பேக்சரிங் கம்பெனி	48,00,000
6	போனிக்ஸ் மில்ஸ்	48,00.000
7	ஷோலாப்பூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ்	47,96,000
8	விஷ்ணு காட்டன் மில்ஸ்	47,66,500

மெய்ச்செல்வம் எது? எங்கே அது? என்பதுபற்றி ஆதாரங்களோடு விளக்குகிறார்..............

ஈ.வே.கி.சம்பத்

3. ரூபாய் 50 லட்சத்திற்குமேல் ரூபாய் 60 லட்சம் வரை மூலதனம் போட்டு நடத்தப்படும் ஆலைகள்.

எண்		மூலதனம்
1	இலட்சுமி மில்ஸ் (தென்னாடடில்)	53,46,150
1	அப்பாலோமில்ஸ் (வடநாடு)	50,00,000
2	அரவிந்மில்ஸ் ,,	57,75,000
3	பிஹாரிலால் ராம்சிரண் காட்டன் மில்ஸ் ,,	50,00,000
4	தாக்கேஸ்வரி காட்டன் மில்ஸ் ,,	52,94,318
5	எல்பின்ஸ்டன்ஸ் பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ்	55,00,000
6	கோல்ட் மோஹர் மில்ஸ் ,,	50,00,000
7	இண்டோர் மாள்வா யுனைட்டட் மில்ஸ் ,,	50,00,000
8	ஜகட்ஜிட் காட்டன் டெக்ஸ்டைல் மில்ஸ் ,,	53,70,615
9	காட்டாவ் மாக்கான்ஜி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் ,,	59,86,750
10	மோஹினி மில்ஸ் ,,	59,88.257
11	நியூ விக்டோரியா மில்ஸ் ,,	52,02,478
12	போடார் மில்ஸ் ,,	50,00,000

4. ரூபாய் 60 லட்சத்திலிருந்து ரூபாய் 1 கோடி வரை மூலதனம் போட்டு நடத்தப்படும் ஆலைகள்.

எண்	தென்னாட்டில்	மூலதனம்
1	அஜாம்ஜாஹி மில்ஸ் **(O. S.)**	71,94,400
2	உஸ்மானியா மில்ஸ் **(I. G.)**	87,038,00
	[மேற்கண்ட இரு ஆலைகளும் ஐதராபாத்தில், ஐதராபாத் நாணய முறைப்படிஅமைக்கப் பட்டுள்ளவை **(O.S., I.G)**]	
3	மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ்	60,00,000

எண்	வடநாட்டில்	மூலதனம்
1	மோடி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ்	93,21,543
2	மொரார்ஜி கோகுல்தாஸ் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ்	6900000
3	மூயிர் மில்ஸ்	60,00,000
4	நியூ கெய்சர்-இ-ஹிண்ட்ஸ்பின்னிங் அண்டு வீவிங்	60,00,000
5	ஒரிஸ்ஸா டெக்ஸ்டைல்மில்ஸ்	71,83,350

8-ம் பக்கம்

தாண்டவர், தூத்துக்குடி.

கவிஞனுக்கும் கலைஞனுக்கும் வித்தியாசமென்ன?

'விலை'! அதாவது 'வி' யும் 'லை' யும்!

ராஜதண்டனையில் வந்த அவ்வை யார் கதை வரலாறு? உங்கள் கற்பனையா?

'ஜெமினி கோமாளிகள்' எடுத்த அவ்வையார் வரலாறு கற்பனையா? அதுபோலவே இதுவும்.

விநோதன், அழகியநாதபுரம்.

தனக்கிருக்கும் துன்பங்களை மறப்பதற்கு வழி என்ன?

பிறருக்கும் துன்பமிருப்பதாகவும், அது பெரியது எனவும் தானாக முடிவுகட்டிக் கொள்ளல்.

கணக்குகளிலே கஷ்டமான கணக்கு எது?

மனிதன் தன்னைப்பற்றிப் போட்டுக்கொள்ளும் கணக்கு.

'ஆட்சி அரசியலை' அயோக்கியர்கள் நடத்தமுடியுமா?

முடியாது. ஆட்சி அரசியலுக்கு யோக்கியர்கள் தான் தேவை! ஆனால் யோக்கியர்களுக்கு ஆட்சி அரசியல் தேவையில்லை.

கோவிந்தசாமி, கோலைகாரன் பேட்டை.

உலகத்திலேயே மிக நீளமானது எது?

பண்டித நேருவின் நாக்கு!

கே. ராமலிங்கம், மதுரை.

எந்தப் போராட்டமும் தேவையில்லை என்று நிதிமந்திரி சுப்ரமணியம் சொல்லுகிறாரே காரணமென்ன?

தன் பிழைப்புக் கெட்டுட்போகும் என்பதே.

பிள்ளையாரை உடையுங்கள் கவலையில்லை, கொடியை எரிக்காதீர்கள் என்கிறாரே அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பிள்ளையாரை உடைத்தால் அவருக்குக் கோபம் வராது, அனுமாரை உடைத்தால் தான் அவருக்குக் கோபம் வரும்.

சிங்காரவேலு, நத்தம்.

பாஸ்போர்ட் உரிமை இன்னும் சென்னை சர்க்காரின் கையில் தான் இருக்கிறதா?

அதையும் மத்திய சர்க்காரே எடுத்துக்கொண்டு விட்டது. கடைசியாக இருந்த கோவணத்தையும் உருவிக்கொண்டு சென்னை சர்க்காரை நிர்வாணமாகவே விட்டு விட்டார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சி ஏன் போராட்டம் ஒன்றும் ஆரம்பிக்கவில்லை?

ரஷ்யாவிலிருந்து உத்தரவு வந்திருக்காது!

வீரப்பன், சிங்காநல்லூர்.

'ஜனசக்தி' நிதிக்கு சிலர் ஆடு மாடு, எல்லாம் கொடுத்தார்களாமே, ஏன்?

நீங்கள் 'பத்திரிகை' நடத்துவதைக் காட்டிலும் ஆடு, மாடு மேய்க்கலாம் என்பதைச் சொல்லாமல் சொல்லுவதற்காக.

'குமுதம்' நடத்திய 'இவரே என் தலைவர்' கட்டுரைப் போட்டியில் ஆச்சாரியாருக்கு அடுத்தபடியாக அண்ணாதுரையைப்பற்றியே அதிகப்படியான கட்டுரைகள் வந்திருக்கின்றனவே இது எதைக் காட்டுகிறது?

நம்மவர்கள் பலர் குமுதத்தைப் படித்திருக்க மாட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. படித்திருந்தால் அண்ணாதுரைக்குப் பிறகு தான் 'ராஜாஜி' நின்றிருப்பார்; குமுதம் அக்ரகாரத்தில் நிறையச் செலவழிகிறது. அந்தக் கணக்கை வைத்து 'ராஜாஜி'க்கு அண்ணாதுரையைக் காட்டிலும் அதிகம் மதிப்பிருப்பதாக முடிவுகட்டி விடாதீர்கள்.

சேண்பகநாதன், சென்னை-5.

விநாயகம் வடக்கெல்லைப் போராட்டத் தளபதியாமே?

வடக் கெல்லையில் 'விநாயகர் உடைப்பு' ஒன்றும் நடைபெறாது. கவலைப்படாதீர்! போனபடியே திரும்பிவிடுவார்.

விநாயகம் எதுவரையில் படித்திருக்கிறார்?

திருக்குறள் மூன்றடி என்று சொல்லுகிற அளவில்!

விநாயகம் தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்தவரா?

நிச்சயமாக! அவருக்கு இருக்கிற புத்திக்கு வேறு எந்தக் கட்சியில் சேரமுடியும்!

சிலர் தம் பெயருக்கு முன்னால் 'கவி' என்று கையெழுத்துப் போடுகிறார்களே ஏன்?

தன் கவிதையைப் படித்துவிட்டு, மக்கள் புரிந்துகொள்ள முடியாது என்பதால்.

எதிர்க்கட்சியின் விரோதிகளெல்லாம் என் கட்சிக்காரர்கள் என்று சிவஞானம் சொல்லுகிறார் உங்கள் அபிப்பிராயம் என்ன?

சமைக்கமுடியாத அழுகல் காய்கறி யெல்லாம் எனக்குச் சொந்தம் என்று குப்பைத்தொட்டி சொல்லுகிறதே, உமது அபிப்பிராயம் என்ன?

வாள்கொண்டு தாக்குவோம் வா!

வெண்பாப் போட்டி 12-க்கு வந்த வெண்பாக்களில், இந்த இதழில் வந்த இரண்டு பக்கங்களும் சேர்த்து சுமார் 85 வெண்பாக்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் சில வெண்பாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் அவை ஒரே கருத்துக் கொண்டிருந்ததாலும், இடமின்மையாலும் பிரசுரிக்கப்பட முடியவில்லை. அவற்றை எழுதியோர் பெயர்கள் மட்டும் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளன:-

(1) இளசை. இளங்கோவன், 22, பந்தனிவாஸ், புத்தூர், திருச்சி. (2) இசைச் செல்வன், வெங்கடாபுரம் - அம்பத்தூர். (3) எ.கே. மணி, அயன்புரம், சென்னை-23 (4) பி. துரைராஜ், 169, சாத்தார வீதி, சீரங்கம். (5) செல்வப்பன், சீகராசபுரம், திருவலம் அஞ்சல். (6) வேங்கட ராசன், 170, சாத்தார வீதி, சீரங்கம். (7) ஏ. அன்புதாசன், 2-105 மவுண்டு ரோடு, தேனும்பேட்டை, சென்னை-18. (8) ரா. பொன்னுசாமி, கொண்டையம்பட்டி. (9) நா. தனபாலன், தி. ரோட், பள்ளிபாளையம் அஞ்சல் (வழி) ஈரோடு. (10) முத்தமிழ்ப் பித்தன், நாரைக் கிணறு. (11) கு. வதனன், 21, குப்பையர் தெரு, சென்னை-1. (12) தேசிபிரான், சென்னை-6. (13) பொன். மணிக்காளை, சிறுகுடி. (14) பொ.இரா. தமிழ்பதி, அத்தையூர், எரையூர் அஞ்சல். (15) எஸ். ஏ. கைலநன், வேலூர் ரோடு, சேவூர் அஞ்சல். (16) வ. பெ. ராமசாமி, சங்கிலியாண்டபுரம், திருச்சி. (17) அடைக்கலக்குணன், கோவிலூர், கள்ளிவேலிப்பட்டி அஞ்சல். (18) இ. மாதன், தொட்டைக்கொம்பை, நீலகிரி. (19) கே. எம். கோபால், கே. எம். பி. மில்ஸ், செவ்வாப்பேட்டை, சேலம். (20) மணிவண்ணன், இரண்டாம் வகுப்பு, புனித யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை. (21) சி.சா. தண்டபாணி, சீலைபிள்ளையார், புத்தூர் அஞ்சல். (22) முதுக்கண்ணன், கண்ணம்மை அச்சகம், புதுச்சேரி. (23) திரு. ராமன், புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி. (24) கே: ஆர். விஸ்வநாதன், அரிசிக்கடை, கடைவீதி, எஸ். வி. நகரம் அஞ்சல். (25) அ. செழியன், 10, சிங்காரத்தோப்புத் தெரு, திருச்சி. (26) மு. குமரன், 104, வெங்கடேசபுரம், அயன்புரம், சென்னை-23, (27) கி. சித்தாராமன், கனகாலி அஞ்சல். (28) இரா. வே. முத்துச்சாமி, மதுரை. (29) மு.கா. பக்கீர்முகம்மது, ஆத்தங்கரை, அழகங்குளம் அஞ்சல். (30) வ. பெ. நடராசன், செட்டில்மெண்ட் இன்ஸ்பெக்டர், பிராஞ்சு செட்டில்மெண்ட் ஆபீஸ், திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) (31) மு. தேவராசு, 21-6" லைட்ஹவுஸ் ரோடு, கோவை.

2-வது தரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள்:

(1) கவியரசு, திருத்துறை. (2) பொன். முத்து, 55, மேற்கு மாளிகை, அரசர்கல்லூரி, சிவகெங்கை. (3) சின்னமணி, திருச்சி டியூட்டோரியல் கல்லூரி, திருச்சி. (4) பி.எஸ்.எப். தீன், முஸ்லிம் தெரு, பிச்சாண்டார் கோவில். (5) "ஸ்பால்" குருவிக்கொண்டான் பட்டி. (6) அன்பிறெளி, கட்டிமேடு, தஞ்சை மாவட்டம். (7) போ. இராசகோபாலன், குடியரசு மாணவர் விடுதி, வண்ணாரப் பேட்டை, திருநெல்வேலி மாவட்டம்- (8) எஸ். அச்சுதன், பாளையம்பட்டி அஞ்சல். (9) கமல-சுப்பிரமணியம், 3-26, மெயின் ரோடு, கொண்டலாம்பட்டி, சேலம் மாவட்டம். (10) கு. மதிவதணன், 2, விசயராகவ மேஸ்திரி தெரு, நல்லூர்பேட்டை, குடியேற்றம். (11) செ. கு. பெரியசாமி, 38, தங்கக் குதிரை தீப்பெட்டிக் கம்பெனி, நல்லூர்பேட்டை, குடியேற்றம். (12) அ.மு. பரமானந்தன், 25, காரணீஸ்வரர் கோயில் தெரு. சென்னை-15. (13) அமுதன், சிக்கராயபுரம், குன்றத்தூர் அஞ்சல். (14) நா. வையாபுரி, பழையபாளையம் அஞ்சல், நாமக்கல் தாலுகா. (15) வே. ந. நாராயணன், ஆசிரியர், திருக்கழுக்குன்றம். (16) ப. காளியப்பன், மகிழம்பூச் சாவடி. (17) சு. சுடலையாண்டி, பி. எஸ்சி, வடக்குத்தெரு, கன்னியாகுமரி. (18) இராம. இலக்குவன், தேவகோட்டை. (19) பா. திரு. அரியரன், III B.Sc. (Geology) 41, M.A.H.; அழகப்பா கல்லூரி, காரைக்குடி. (20) ஒய். சேக்கப், ஆசிரியர், லோயர்பாரளை, பொள்ளாச்சி வழி. (21) வ. சுப்பிரமணியம், 87, சந்தைப்பேட்டை புதூர், நாமக்கல் அஞ்சல். (22) எம். வேதகிரி, மளிகை பஜார், ஆரணி. (23) கோ. அரசன், தெற்குத்தெரு, அகூர், குடந்தை அஞ்சல். (24) எஸ். ஆர். கோவிந்தராசன்' மாங்காடு. (25) சை. ந. முல்லையரசி, சேலம். (26) இரத்தின மனோகரன், கோலார் தங்க வயல். (27) அ. நவநீதம், கொண்டையம்பட்டி. (28) கா.பொ. சண்முகம், சைதாப்பேட்டை, சென்னை-15. (29) ப. ஜெயபாலன், 6-7-16, நாடார் கீழத்தெரு, அருப்புக்கோட்டை. (30) சாமி, எழிற்செல்வன், கீழைத் தெருவு, பழைய வளவு, பாகனேரி. (31) திரு. தாத்தார், எரேகவுண்டன் புதூர், ஒட்டன்சத்திரம் அஞ்சல். (32) வித்துவான் சி. கோபாலன். மணக்குடி. (33) நா. இளமதிவேணி, ஆரணி. (34) பி. எ. காசிமலை, சின்னமனூர், விருதுநகர். (35) க. இராமசாமி, ஆயக்குடி. (36) 'வளவன்' குடந்தை. (37) தி. சி. கருப்பண்ணன், எம்.ஏ., பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம். (38) பா. வேலன், கோயம்புத்தூர். (39) இரா. ப. மனோகரன், மதுரை.

(தேர்ந்தெடுக்கப்படாதவை 1600)

★

மாற்றுமொழி வேண்டா மணிபோன்ற செந்தமிழில்
வேற்றுமொழி யேதிணிக்கும் வீணரையே--போற்றிநிதம்
தாள்கொண்டு தன்னலத்தைத் தேடும் தறுதலையை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

ஆ. வே. சாத்தூர்சாமி, மேலைச்சிவபுரி.

★

வாழ்ந்த வளமான வாழ்வை மறந்தவராய்த்
தாழ்ந்த உணர்வினராய்த் தீயோரை--வாழ்கவெனத்
தாள்பணியும் தன்மதிப்பற் றோரை அறிவென்னும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வை. சுப்பிரமணியன், ஆசிரியர், உயர்நிலைப்பள்ளி, வடசேரி.

★

சொந்தமற்ற இந்தத் தமிழ்ப்பூங்கா கண்ணியே
இந்தியென்னும் மந்தி நிலைபெற--வந்தனைசெய்
வேள்வியர்க்கு, வால்பிடிக்கும் மானமில்லா வீணரையே
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—இரா. விந்தன், ஜான்சன்பேட்டை, சேலம்.

★

தோட்டத்தில் வந்துலவும் தேமொழியே உன்னுடைய
வாட்டத்தைப் போக்க வழிகண்டேன்--நாட்டினிலே
சூள்கொண்டு நாமொன்றாய் சூதுசெய் சாதிதனை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வ. சு. தமிழன்பன், வல்லம்.

★

ஆவி தரிப்பதில் ஒன்(று)ஆனார் அவனியிடை
பாவின் நூல்என்னப் பலர்உழல--கோவிலின்
காளையென்னச் சில்லோர் களிக்கவைக்கும் கொள்கைதனை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ப. ச. திருமுருகு, அழகிய நல்லூர்.

★

கன்றுபோல் துள்ளியெழு ! போர்முரசு கொட்டுதுகேள் !
தென்றல்வாழ் நாட்டினிலே வாழ்வோனே !--இன்றேநாம்
கொள்கைப் படையினிலே பங்கேற்று வஞ்சகரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வீ. ரா. மோகன், சென்னை-1.

★

பள்ளன் பறையனுயர் பார்ப்பான் பகடையொடு
கள்ளன் மறவனெனக் காசினியை--கிள்ளிவிட்டு
பாழ்உண்டு பண்ணிவிட்ட பாதகனின் வம்மிசத்தை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—பி. வி. ராமு, நாரைக்கிணறு.

★

அறிவுக்கா மன்றில் இயற்கா செறுவில்
பரிவுக்கோ நாம்பாருக் கொப்பு--உரிமைக்கு
நான்தேறி ஆரியரை வெல்ல ஒருமையில்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—இரா. தன்முகம், குடியாத்தம்.

★

மடத்தலைவர் மங்கையர் தாசர்; மடையர்
மடத்திற் பொருளைக் கொடுப்பார்;--அடற்றமிழா,
மூளையில் மூடரின் முண்டங்கள் துண்டாக
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—சா. பில்லப்பன், பாகனேரி.

★

வளமார் திராவிடத்தை வஞ்சனையால் தாழ்த்தும்
வடவரின் இந்திவெறி வீழ--வளவா, நாம்
வாழவழி காட்டு(ம்)மொழிப் போரிலே கூடிஅற
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வேலழகன், திருவையாறு.

★

ஓர்மொழியால் ஓர்குடையில் உன்னரிய பார்முழுதும்
சீர்வழியில் ஆண்டுவந்த செந்தமிழா !--ஆர்தொழிலால்
தாழ்வடைந்தாய் ? வாழ்வடையத் தாமதியேல் வஞ்சகரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ஆசிரியர் சவ்வாது, கயற்கண்ணிபுரம்.

★

செத்த வடமொழியைச் சீர்பெறவே யிந்தியென
முத்தமிழுக் கூறாக மோதுவிக்கும்--எத்தரெலாம்
தாள்விண்டு தானோடத் தாரணியில் பகுத்தறிவாம்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—தாய. க. வெங்கட், ஜுபிடர் பிக்சர்ஸ், சென்னை-28.

அந்தோ பகிஎன்று ஆற்ரு தழுவோரின்
வெந்துயரக் கீதம் விதிவினையென்--றிந்தியத்தில்
நாள்பலவாய்க் கூறும் நயவஞ்ச ஆரியத்தை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—வி. ப. கோவிந்தசாமி, சென்னை-12.

★

போவென்ருல் போய்விடுமோ போக்கற்ற இந்தியது
சாவென்ருல் அஞ்சாத நம்மிடமே--ஓவென்று
துள்ளி விரைந்தோட தென்றல்சுக காட்டினனே !
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—மா. வே. கி. சாமி, சென்னை-1.

★

பட்டினியால் மக்கள் பதைபதைக்கத் தாங்கள்மட்டும்
இட்டமுடன் உண்டுபருத் தேப்பமிட்டு--கெட்டுடலை
ஆள்கொண்டு தூக்கச்சொல் அற்பவதி காரர்தமை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—க. மா. முத்துசாமிப் புலவர், அருப்புக்கோட்டை.

★

காதலித்த கன்னியைக் கைப்பிடிக்க வொட்டாது
பேதலித்து உள்ளம் பிதற்றிடவே--செய்துவரும்
சாதித்து வேசமாம் சாக்கடை நாற்றமதை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—சித. பெரியணன், கருவேல்குறிச்சி.

★

புலவர்தம் வாழ்வில் பொருந்தும் வறுமை
நிலமதே நீக்கலே நேர்மை--உலகினிலே
மீள்கவே அன்னர்யாம் வெய்யவறு, மைக்கூற்றை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—இரா. கருப்பையன், ஆசிரியர், கண்டர்கோட்டை.

★

போகாது பேதலிப்பப் போக்காது வாழினும்
வாகில் வடவனே வாழ்ந்துதொலை !--பாகுள்ள
வாளாராம் எம்மை வதைத்திடவும் நீநினைக்கின்
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—ச. தங்கவேலு, பந்தல்குடி.

★

தெய்வத்தைக் கல்லாக்கி தட்சிணையும் வாங்கியே
செய்கின்ருர் புன்மொழியால் அர்ச்சனையை--ஐயகோ
நாள்கடத்தக் கூடாது நற்றமிழா ; பார்ப்பனரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—ந. பிச்சைமுத்து, பாகனேரி

★

வந்தவர்கள் தங்கள் வாழ்வை வளமாக்க
அந்தோ ! தமிழ்த்தாயி னங்கமதில்--இந்தியெனுந்
தேள்கொண்டு கொட்டச் செய்கின்ரு ரன்னவரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

தென்றல் கனிகுலுக்கும்; தேனிலவு வானுலவும்
மன்றல் குழலசையச் சென்றிடுவோம்--என்றென்றும்
ஆள்மயக்கி நாமென்னும் ஆணினத்தை நீள்கண்ணும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—பாவநாசம்--பொன்னிவளவன்.

★

காதல் மணத்தைநற் கன்னல் தமிழ்மொழியில்
ஓதி முடித்தற்கு ஒப்பாத--சூதுநிறை
வேள்வி மணமுறையை வீழ்த்தப் பகுத்தறிவாம்
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—முருகு, வரகூர்.

★

தாழாத் தமிழ்வாழும் தண்புனல்சூழ் தென்னுட்டில்
ஆழக் கிடக்குமொழி ஆண்டிடுமேல்--தோழாநாம்
தோள்சூழும் அவ்விந்தி கூவிப் புறங்காட்ட
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—ராதாபாய், திருக்கழுக்குன்றம்.

★

அஞ்சற் பலகையில் அந்தமிழாம் அன்னைக்கு
மஞ்சமிலை அஞ்சாதே மாவீரா--மிஞ்சுதலால்
தாள்பணியா வஞ்சகரின் இந்திப் பலகைகளை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—வ. கோவழகன், ஆயக்குடி.

★

பாழான இவ்வுலகில் ஏன்பிறந்தோம் யாமென்று
ஏழான கோடிப்பேர் எண்ணுவதால்--தோழாநீ
நாள்முழுதும் நன்றுசெய்யா நாசகரைப் போக்கிடவே
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—கரு. சுப்பிரமணியன், பாகனேரி.

இந்திபடி யுங்களென இந்நாட்டை வற்புறுத்த
முந்திவரு கின்றநிர் மூடர்களை--செந்தமிழா!
தோள்கொண்டு தாக்கித் துரத்துவோம் ; நாமவரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—அ. ச. பாலு, பொள்ளாச்சி.

★

என்னைப்போல் நன்ருய் எழுதுபவர் யாருமிலை
என்று சனுதனத்தை என்தோழா--தென்தமிழில்
நாள்உம் கலந்திடுவார் நாசத்தை நாம்பேனு
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

★

நங்கை குணத்திற்கே நாயகமாய் ஒன்றுண்டு
பங்கமிலாக் கற்புநிலை என்றறிவர்--செங்கணிரு
வேல்கொண்டு தாக்கவரும் வெற்றிமா தரைஅன்பு
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—சகுமன், ஓவிய ஆசிரியர், ஆந்தூர்.

★

நேற்றும் தினமும் நெடுக உறவாடி
ஏற்றம் பலஇசைத்தும் இஞ்ஞான்று--மாற்ருரின்
தாள்தொழுது வாழும் தருக்கான வீடணரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—நம்பி தம்பி (B.A.) அரக்கோணம்.

★

சாதியினைக் காட்டிநமைச் சாடுகின்ருர் பண்பில்லார்
பேதமிலா அன்புமொழி பேசுகின்ற--காதலியே
தாழ்எண்ணம் கொண்டஅத் தன்மை யினரொழிய
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—நே. பி. பிச்சையா, கடையநல்லூர்.

★

கார்காலம் வந்திடுவேன் கண்மணியே ! என்றுசொல்லிப்
போர்க்கோலம் பூண்டவராய்ப் போனவர்க்குச்--சீரழகே !
தோள்கண்ட வாட்டத்தைச் சொல்லி உனதிருகண்
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—அமரன், காமாட்சிபுரம்.

★

நாய்களுடன் எச்சிலிலை நாடிநிதம் சாடுகின்ற
தாயகத்து மக்களினைத் தாம்பார்த்தும்--சேயிழையே
வாழ்கின்ருர் வாட்டமின்றி வன்கண்ணர் ; அன்னவரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—ப. புகழேந்தி, கடையநல்லூர்.

★

தப்பாது வாழ்ந்த தமிழகத்தும் ஆடுதடா
அப்பாவி மக்கள் அறியாமை !--அப்பேயை
நாள்கொண்டு போகுமுன் நம்மரபுக் கூரறிவு
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—இராசேந்திரன், புதுவை.

★

மூவேந்தர் காத்திட்ட முத்தமிழுக் கூறெனவே
சாவோலை நீட்டிச் சமர்ப்பித்தார்--தாவில்சீர்
தோள்வன்மை காட்டிநற் றாயதமிழ் காப்பாற்ற
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—அ. வை. நாதன், அகூர்.

★

நல்கூர்ந்தார் தம்வினைக்கு நாமோ பிணைப்பலையிற்
சொல்கூர்ந் தருளிச் சுகித்திடுமோர்--செல்வந்தர்
ஆள்கொள் அடிமை அவலத்தைத் தண்டமிழா
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—வ. மனேகரன், ச. வி. நகரம்.

★

விந்தியமா மிந்நாட்டின் வேலியினைத் தாண்டிவரும்
இந்தியெனும் வெள்ளா டிளம்பயிராம்--செந்தமிழை
வாளெயிற்று வாயாலே வாழாமற் செய்யுமதை
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—கோ. இராதா, கோவை.

★

காதல் மணமென்ரேம்; கன்மனத்தார் துன்புற்றுச்
சாதல் நமக்கென்ருர் சாதலா ?--கோதையே
நீள்மாலை சூடியபின் எத்துயர் வந்துறினும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.
இரா. செல்வன், பாளையங்கோட்டை.

★

பைந்தமிழ்ச் சோலையில் வந்திறங்கப் பார்த்திடும்
மந்தமுடை மொழியாம், மாண்பற்ற--இந்தியதன்
தாள்போற்றி நிற்கும் தடியரை மாய்த்திடவே
வாள்கொண்டு தாக்குவோம் வா.
—சோ. கருப்பையா, பாகநேரி.

வெண்பாப் போட்டி

13. நெஞ்சிலே யிட்ட நெருப்பு !

வெண்பாப்போட்டி 13-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ உருகி உடல்கருகி உள்ளீரல் பற்றி
எரிவதுவோ தாயகத்தான்? மக்காள்--''ஒருமை'' யெனும்
நஞ்சிலே தோய்த்து நமையழிக்கும் இந்திப்பெண்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ஜே. கஸ்தூரி ஆசிரியை, பாவூர் சத்திரம்.

★

இன்று தமிழரை ஏசுவோர்க் கெச்சரிக்கை !
அன்று பழித்தவர்கள் ஆர்மீண்டார் ?--நின்றுகேள்
பஞ்சிலே இட்ட பொறியாறும், ஆறுதே
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ய. வேலன், கோயமுத்தூர்.

★

காதலித்து கண்ணியமாய்க் கைப்பிடிப்பார் என்றுமனம்
பேதலித்து நானிருந்தேன் பேதமையால்--காதலரோ
நஞ்சென்றே வஞ்சியெனை நாடிடவே அஞ்சிடுதல்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—எம். ராஜம், கோவை.

★

வெய்யவர்தம் கோல்முறித்து, வீணர் தமைப்பொசுக்கி
வையமெலாம் நெய்த்து வதைக்குமே !--மெய்வருத்தாப்
பஞ்சணையீர், நுத்தம் பகட்டால்நீர் ஏழைமக்கள்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ம. தங்கப்பா, கோபாலசமுத்திரம்.

★

முன்னேற்றக் கழகத்தின் மூதறிஞர் அண்ணாவின்
பொன்னான பேச்சென்றால் பூசுரர்கள்--மின்னேகேள் !
அஞ்சியே சாகின்றார் ! ஆளவக் தார்க்குமது
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—மதிமன்னன், பொள்ளாச்சி.

★

தண்புனல் மூழ்கிலென் சார்ந்திலென் பூங்காவை?
தென்றல் உலவிலென்? தீர்விலையே !--ஒண்டொடிசேர்
செஞ்செற் கிழத்தியவள் தீராப் பிரிவாலென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—பாபன், நாங்குனேரி.

★

அஞ்சொலின மங்கை, அமிழ்தம் தமிழிருக்க
நஞ்சனைய துஞ்சுமொழி இந்தியெனும்--வஞ்சிக்கு
அஞ்சலி செய்ஙனும் ஆணை தமிழர்க்கு
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ஆடலூரான், தஞ்சை.

★

மண்புனல் காற்றும் மாளாத வெந்தீ;யென்
கண்ணீர்க் குளமுந்தான் வற்றியதே !--அண்ணலே,
பிஞ்சிலே பெற்ற விதவை யெனும்பெயர்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—சாத-இறையரையன், பாகனேரி.

★

வெங்கனல் வீசுதுகாண்; வேதனை தாங்கவில்லை
எங்கையிற் கத்திகொ(டு) ஏ; தமிழ்த்தாய் ! எங்கோமாள்
மஞ்சளை பூசாது வாடி யிருக்கதிலை
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—அருகு-கந்தன், பாகனேரி.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
பாங்குடை யப்பொருள் பார்த்திரோ ?--பூங்குழலே
பஞ்சினும் மெல்லியபூம் பாதமுடை வஞ்சிநீயென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—இராச. அரங்கராசன், இளங்காடு.

★

உன்மைந்தன் எங்கென்றால் ஏகிட்டான் காண்குகையை
என்றுவயிற் றைக்காட்டி இன்பமுறும்--பெண்குலத்தை
மஞ்சச் சிலையாக்கும் வஞ்சகத்தை எண்ணிலது
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—அ. சீனிவாசன் (''பாவன்பன்'') கும்பகோணம்.

★

அன்பு லலிதாம்பாள் அன்றைக்கே சென்றதினால்
என்புருவாய் மாறிவிட்டேன் என்சொல்வேன் ?--அன்பமிகு
வெஞ்சினத்தால் காவேரி வெள்ளத்தில் வீழ்ந்தசெய்தி
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ந. இராமலிங்கன், திருவையாறு.

★

நஞ்சு மிகவுடைய நாகந்தான் கொட்டிடினும்
துஞ்சவுரு மல்நகுலம் தூர்க்காதோ ?--வெஞ்சமர்க்கும்
அஞ்சாநன் நெஞ்சா ! அழிக்குமோ வஞ்சகர்நம்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—இரா. சண்முகம், பண்ணைக்காடு.

★

எரியுதே உள்ளீரல்; ஐயகோ, வெந்து;
கருகுதே கட்டுடலம்; அஞ்சும்--பெரும்போரால்,
வெஞ்சுடலை தன்னில் நடராசன் தாலமுற்று
நெஞ்சிலே யிட்ட நெருப்பு

—அ. திங்கள்கொண்டான், கடலூர், புதுநகர்.

★

ஆரியரால் வேதத்தால் ஆபாச வேற்றுமையால்
பாரிழந்தோம் பண்பிழந்தோம் பாழுற்றோம் !--சீரியோய் !
எஞ்சுதலில் இந்தியையும் ஏற்பமேல் ஐயகோ !
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ச. த. வேலன், பந்தல்குடி.

★

மாந்தர்கள் எல்லாம் மதப்போதை விட்டொழிந்துச்
சாந்தி மிகப்பெறவே தான்நடந்த--காந்தியினைக்
கொஞ்சமும் அன்பின்றிக் கொன்றானே; பற்றுதே
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—செ. கிருஷ்ணசாமி, அரக்கோணம்.

★

இரந்துவாழ் கின்றமெம் ஏழ்மையை மாற்றிப்
புரந்திடா ஆட்சி புரிவீர்--கிரந்துவரும்
அஞ்சாண்டுத் திட்டம் அதிதரின் அச்செயலெம்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—மு. சீனிவாசன், வத்தலக்குண்டு.

★

நச்சரவா யூர்ந்திட்டார் நம்மிடையே ராசாசி
அச்சமயம் அன்னாரின் ஆட்சியிலே--பச்சையுள
பிஞ்சினப் பாலர் பெருமனதில் கல்விமுறை
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

இரா. கருப்பையன், கண்டர்கோட்டை.

★

கண்ணென்றார் காதற் கனியென்றார் ஆ! கடித்(து)
உண்ணென்றேன் ஒத்த மணமுடித்து--மண்ணேறுக்கிப்
பஞ்சைநீ யென்றார் பதறியழப் பற்றியதே
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—இரா. ப. மனோகரன், மதுரை.

★

பற்றுள்ளம் பெற்றுள்ள பண்புடையான் நீக்கமும்
கற்றறிந்தார் சொற்றிரும்பாக் காவியமும்--வெற்றிசேர்
நெஞ்சுடையா னுக்கொன்று நேர்வதும் இம்மூன்றும்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ரெ. காமாட்சி, மதுரை.

★

கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முற்றோன்றி வீரர் முடிகொண்டான்--இற்றைநாள்
அஞ்சிப் பிறர்க்கடிமை யாந்தமிழன் என்னுஞ்சொல்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—டி. எஸ். தேவராஜன், சென்னை-21

★

வெள்ளைய ரந்நாளில் விட்டகன்ற ஆட்சிவழி
கொள்ளையிடுங் கும்பல் கொடியெரிக்க--உள்ளம்
அஞ்சாத ஈ. வே. ரா. அணிவகுப்பு ஆரியரின்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—செட்டி கருஞ்சிவலை, இலங்கை.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.